நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 08 [21-05-93] வெள்ளிக்கிழமை ஓசை 92

### 'இது எங்கள் தேசம்' வீடியோ படம் வெளியீடு

முல்லை மாவட்ட விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்உருவாக்கிய 'இது எங்கள் தேசம்' வீடியோ ஒளிப்பட நாடா வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. முல்லைமாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. க. சங்கர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வெளியீட்டு விழாவை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா அவர்களும், மகளிர் படையணி (10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுக்கு எதிரான
# இராணுவ நடவடிக்கையில் மாற்றம் எதுவுமில்லை

### கூட்டுப்படை தலைமையக அதிகாரி தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகப் பேச்சாளரான பிரிகேடியர் அங்கமன பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும் போது தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலைகள் போன்ற சம்பவங்கள் எமது இராணுவ நடவடிக்கைகளை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்றும், தமது இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த இரண்டு மாதகாலமாக கிழக்கு மாகாணத்தில் தொப்பிகலைக் காட்டில் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் இடம் பெறுவது தெரிந்ததே.

## தேர்தல் முடிவு குறித்து ஆராயப்படவில்லை

### ஹரல்ட் ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் முடிவுகள் குறித்து அமைச்சரவையில் ஆராயவில்லை அது கட்சி மட்டத்திலேயே ஆராயப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத் செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

மேல் மாகாணசபையில் ஐ. தே. க. தோல்விகண்டதற்கு ஒரு விடயம் மட்டும் காரணமாக இருக்கமாட்டாது. பல விடயங்கள் காரணயாக இருக்கலாம். இது குறித்து சிந்திக்க வேண்டும். இது குறித்து கட்சி செயற்குழு கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் அவர் கூறினார்.

பிரேமதாசா கொலை தொடர்பான விசாரணை நடைபெறுகிறது. விசாரணை முடியமுன் அது குறித்து எதுவும் வெளியிடமுடியாது என்றும் அமைச்சர் ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## உறுப்பினர் பெயர்கள்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் ஒவ்வொரு சபைக்கும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு இது குறித்துத் தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. தெரிவான உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

இதேசமயம் போனஸ் ஆசனங்களுக்குரியவர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி கட்சிகளை தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

## ஹேமாவிற்கு எம். பி. பதவி வழங்கப்படமாட்டாது

### டி. பி. விஜயதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசா பாராளுமனறத்திற்கு நியமிக்கப்படமாட்டார். அவர் வழமையான வழிமூலமாகவே வர முடியும் என ஜனாதிபதி விஜயதுங்கா தெரிவித்துள்ளார். கடந்த வாரம் சென்னை இந்து பத்திரிகையின் ஆசிரியர் என். ராம் இற்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார்.

முன்னதாக திருமதி பிரேமதாசா பாராளுமன்றத்தில் ஐ. தே. க. உறுப்பினர் ஒருவருக்குப் பதிலாக அவ்விடத்திற்கு கட்சியினால் நிரப்பப்படலாம் எனக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இதேசமயம் ஹேமா பிரேமதாசா ஜனாதிபதி வாசஸ்தலத்தில் மூன்றுமாத காலம் தொடர்ந்து தங்கியிருக்க ஜனாதிபதி விஜயதுங்கா அனுமதி அளித்துள்ளார்.

## விபத்தில் இராணுவ அதிகாரி பலி

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற வாகன விபத்தொன்றில் சிக்கி சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் பலியாகியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை [illegible]வத்த பகுதியில் நடைபெற்ற வாகன விபத்தில் கொல்லப்பட்டவர் சிறிலங்கா இராணுவ மேஜர் வரக்காப்பொல என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் பனாகொடை இராணுவ முகாமிலிருந்து ஜீப்பில் சென்றுகொண்டிருந்த போது வெள்ளவத்த பகுதியில் அது பேருந்து ஒன்றுடன் மோதியதில் கொல்லப்பட்டார்

### கண்ணிவெடியில் படை அதிகாரி பலி

(கொழும்பு)

பலாலிப் பகுதியில் கண்ணிவெடியில் சிக்கி கடந்த 14ஆம் திகதி சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மாத்தளையிலுள்ள ரத்தோட்டையைச்சேர்ந்த இராணுவ மேஜர் பராக்கிரம பண்டாரா என்பவரே கண்ணிவெடியில் கொல்லப்பட்டவர் ஆவார்.

இவர் பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சி பெற்றவர் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அரசியல் யாப்பிற்கு புதிய அமைச்சு அமைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி விஜயதுங்கவின் அமைச்சரவையில் மேலும் ஒரு புதிய அமைச்சு நேற்று முதல் உருவாககப்பட்டுள்ளது. அரசியல் யாப்பு மற்றும் இராஜாங்க அலுவல்களுக்கான அமைச்சு என்ற புதிய அமைச்சே புதிதாக ஆரம்பிக்கப்பட்டதாகும்.

அரசியல் யாப்பு மற்றும் இராஜாங்க விடயங்களுக்கான அமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணியும் எம் பியுமான கே. எம். சொக்ஸி பதவி ஏற்றுள்ளார். அமைச்சர் சொக்ஸி நேற்று ஜனாதிபதி விஜயதுங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அரசியல் யாப்பில் சில திருத்தங்கள் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி அறிவித்து ஒரு வாரத்தில் இது தொடர்பாக புதிய அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என எதிரணியினர் கோரிவருவது தெரிந்ததே.

( 10ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் மீட்பு

(தென்மராட்சி)

மிருசுவில் வடக்குப் பகுதியில் வயோதிபர் ஒருவரின் சடலமொன்று வீதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

புத்தூர் வடக்கைச் சேர்ந்த முத்தன் மாணிக்கம் (வயது 62) என்பவரது சடலமே தலையில் காயத்துடன் தமிழீழக் காவல் துறையால் மீட்கப் பட்டிருக்கிறது. இவரது மரணம் குறித்து தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. [86]

## ஜ. ஐ. தே. முன்னணிக்கு 2 அமைச்சர் பதவிகள்

(கொழும்பு)

கொழும்பு மேல் மாகாணத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு இரு அமைச்சர் பதவிகள் வழங்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்வந்திருப்பதாகஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த சிறிலங்கா மாகாண சபைக்கான தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து ஆட்சி அமைப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தியது தெரிந்ததே.

இதன்படி கொழும்பு மேல் மாகாணசபைக்கு தெரிவாகும் 6 அமைச்சர்களில் இருவர் ஐ. ஐ. தே. முன்னணியிலிருந்து தெரிவாகவுள்ளனர்.

## பிரேமாவின் இரகசிய விசாரணைக்குழு கலைப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் உத்தரவின் பேரில் இயங்கிவந்ததாக கூறப்படும் இரகசிய விசாரணைப் பிரிவொன்று பற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளன. முன்னாள் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையில் இயங்கிவந்த இவ் விசாரணைப் பிரிவில் எழுபதிற்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றியுள்ளனர்.

இவ் விசாரணைக்குழு தற்போது சேவையிலுள்ள பொலிஸ் உயரதிகாரிகள் உட்பட பல உயர் அரச அதிகாரிகளை விசாரணை செய்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

மேலும் அரசியல்வாதிகளினது நடமாட்டங்களை இப்பிரிவு கண்காணித்து வந்ததுடன் ஆளும் கட்சிப் பிரமுகர்களின் நடவடிக்கை பற்றிய விபரங்களையும் திரட்டிவந்துள்ளது.

1990 இல் செயற்படத் தொடங்கிய இது வயர்லெஸ் வசதி என்பவற்றுடன் 30க்கு மேற்பட்ட வாகனங்களை பயன்படுத்தியுள்ளது.

இப்பிரிவு தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவினால் கலைக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டுப்படைத் தளபதியாக சிசில் வைத்தியரட்னா?

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரட்னா அநேகமாக கூட்டுப் படைத் தளபதியாக நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப் படுகிறது.

கூட்டுப்படைத் தளபதியாக தற்போது இருக்கும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார். இதுவரை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலராக இருந்த எயர் வைஸ் மார்ஷல் தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலராக கடமையாற்றி வருவது தெரிந்ததே

இதேசமயம் புதிய இராணுவத் தளபதியாக சிசிலின் இடத்திற்கு தற்போது வட பிராந்திய தளபதி ஜெரிசில்வா நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கொப்பேகடுவ மரணம்; விசாரிக்க மூன்று நீதிபதிகள்

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென காமன்வெல்த் அமைப்பு நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

கொப்பேகடுவ கொலை தொடர்பான நீதிவிசாரணையை கானா, நைஜீரியா, நியூசிலாந்து ஆகியநாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகள் மேற்கொள்வர் என சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

## வரி விளம்பரம்

### நீமியா-பசளை பூச்சி கொல்லி

சிறந்த விளைச்சலுக்கு நீமியா - பயிர் பாதுகாப்புக்குப் பூச்சி கொல்லியாக நீரில் கலந்து விசிற நீமியா - கிலோ பக்கற் விலை ரூபா 18/-. மொத்த கொள்வனவுக்குச் சழிவுண்டு. அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. ' மிலக்வைற்'' (சி/6657)

### றெனி மூக்குக் கண்ணாடியகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடி வழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (4918)

### ஜோதிட விஞ்ஞானம்

ஜெனன ஜாதகங்கள், விவாகப்பொருத்தங்கள் விஞ்ஞான ரீதியாக கணிக்க, பார்க்க, காலையில் சந்திக்கலாம். ''சத்யா'' (Prof. சத்திய தாஸன் Mech. E Elec. E) இடிகுண்ட ருகாமை கட்டுடை. இராசிப் பலன்களும்; கைரேகைசாஸ்திரமும் எங்கும் விற்பனையாகின்றது. (4920)

### துளிர்

தமிழ்நாடு. புதுவை அறிவியல் இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமெற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுககாக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரிய குளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6633)

### சோதிடம்

பன்னாலையில் ஜாதகம் எழுதத் தந்தவர்கள், தற்பொழுது இ. சபாரத்தினக்குருககள் இளைப்பாறிய அதிபர் 333/1, ஆடியபாதம வீதி, கல்வியங்காடு, நல்லூர் என்ற முகவரியில் பெறறுக்கொள்ளலாம். (4931)

## கம்பியூட்டர் கல்வி

BASIC LANGUAGE
4 MONTHs
திங்கள், புதன் வகுப்புகள்
ஆரம்பம் :
24 - 05 - 1993
10.30 மணி
கூடிய செய்முறைப் பயிற்சி; இலவச அச்சடித்த பாடக் குறிப்பு; பயிற்சி முடிவில் சான்றிதழ்.
கட்டணம் :
மாதம் 400-மட்டுமே

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS ST.
JAFFNA.
[சி-6659]

## உலகத்தின்

பதை தீர்மானிகக வேண்டிய இக்கட்டு இன்னொருபுறம் இவற்றினைவிட சீன இனவழியினர் சங்கிலித்தொடர்போல பரந்திருந்து செய்யும் மிகப் பாரிய முதலீடுகளால் தோன்றும் ஒருஇனம்புரியாத நெருக்கடி மறுபுறமாக யப்பான் கலங்க நேரிட்டுள்ளது அதே சமயம் குழம்பியிருக்கும் முன்னாள் சோவியத்துக்கள் குறிப்பாக ருசியா சீனாவினைப் பார்த்து திகைத்து நிற்கின்றது. சோவியத்தின் நிலை தனக்கும் வரக்கூடாது என்பதில் சீனா மிகக் கவனமாக இருப்பது. 1991ஆம் ஆண்டு சோவியததின் வீழ்ச்சியின் வழிகாட்டி நெறிகளாக பலவற்றை டெங் உருவாக்கியதாகக் கூறப்படுகின்றது அவர் அப்போது கூறிய வார்த்தைகள் இவை: ''பரபரப்பு அடையாது பொறுமையாக அமைதியாக இருந்து அவதானியுங்கள். எமது நிலைகளை மிக்க உறுதிப்படுத்துங்கள். எதனையும் அமைதியாக எதிர்கொள்ளுங்கள். முன்னோக்கி தலைமை தாங்க ஓடாதீர்கள்''

இக் கூற்றுக்கள் சீனாவுக்கல்ல பொருத்தம்; ஏனைய நாட்டிற்கே என்கிறார்; சீன விவகாரங்களில் துறைபோன நிபுணர் ஒருவர்.

## சீதன

(I) உள நாட்டிலோ. வெளிநாட்டிலோ சீதனம் என்ற பெயரால் வீடோ, காணியோ கேட்கப்படக் கூடாது.

(II) உள்நாட்டிலோ. வெளிநாட்டிலோ பணம் பெறப்படக் கூடாது.

(III) சீதனம் வழங்குபவர்களுக்கும், சீதனம் வாங்குபவர்களுக்கும். அதற்கு ஒத்துழைப்பவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

(IV) இது குறித்து நடவடிக்கைகளை கண்காணிக்க 'உண்மையுள்ள' குழுவொன்றை விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு நியமிக்கவேண்டும்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணின் மைந்தனாக
20-04-1975

மாவீரனாக
01-06-1992

திதி: 21-05-1993

### வீரவேங்கை இறைகுமாரன்

[தயாளன் (சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு)]
[இரவீந்திரநாதன் வேந்தன்]

தாயை நிகரெங்கள்
தாயகத்தை காதல் செய்தாய்!
தூயதலைவனின் அடிச்சுவட்டில்
துணிவுடனே நீ நடந்தாய்!!
ஓய்தல் செய்யோம் - உன்
இலட்சியம் ஈடேறும் வரையில்!!!

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

21-05-1993 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலியதனை,
தொண்டமானாறு.

குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.
(4927)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை விசுவாசம்

(ஐயம்பிள்ளை ஜெயக்குமார்)
காந்திக் கிராமம், கோணாவில்

தாய் மடியில்:
29-8-1975

தமிழீழ மடியில்:
1-6-1992

''ஜெயமுண்டு பயமில்லை என்று
ஜெயக்குமார் நீ விசுவாசமாகி
வீணர் என்புடைத்துத் தமிழீழ
வீராதி வீரனென வருவேன் என்று
அலம்பிலில் (இராணுவம்) அழித்தாய்
அணைத்தாய் தமிழீழ தாய் பாதம்
அணையாத சோதியாய் மாவீரனானீர்
மங்காது மறையாது மாவீரா விசுவாசம்
மலரும் தமிழீழம் உன் வரலாறு கூறும்''.

இங்ஙனம்
அன்புத்தந்தை, அத்தான், சகோதர
[சி/6655] சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்.

## ஸ்ரீதர் திரையரங்கில்
# In the Line of Duty

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
[சி-6575]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### லெப்டினன்ட் டில்லி (செல்வி)

செல்வி மாரிமுத்து விக்கினேஸ்வரி (விஜிதா)

வீரப்பிறப்பு: 1969-10-10
திதி: 1993-5-21
வீரச்சாவு: 1992-11-24

வீரப் புலியணி இணைந்து - நீ
களங்களை வென்றுமே வந்தாயே
பலாலி எதிரிகள் பாசறை
நோக்கிய போரினில்
புயலாய் விரைந்தாயே.
வீரம் ததும்ப வீறு கொண்டு - நீ
சமரினில் குதித்தாயே
அங்கு பாதகர் குண்டேந்தி-உன்
பூவுடல் தன்னை
பூமியில் சரித்தாயே

பலாலித் தாக்குதலில் வீரச்சாவடைந்த சகபோராளிகளுக்கும் எமது இதயம் கனிந்த வீர வணக்கங்கள்

சின்னக்கடை வீதி,
46, 4-ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
(சி/6662)

உமது பிரிவாற்றாத
பிதா, மாதா, சகோதர
சகோதரிகள், உற்றார்,
உறவினர். நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-21

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-குருநகர்ப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

லெப். வாசன் (மாணிக்கவாசகர் குவீந்திரராசா-புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்.)

1988ஆம் ஆண்டு மட்டு- சந்திவெளிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

2-ம் லெப். அலன் (வேலாயுதம் மனோகரன்- சந்திவெளி - மட்டு.)

வரதன் (வேலாயுதம் வேல்நாயகம்- சந்திவெளி-மட்டு.)

1989ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ வேலுச்சாமி சிவராசா (மரப்பாலம் - மட்டு.)

1990ஆம் ஆண்டு யாழ் - நீர்வேலியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த-

பபி [அப்பையா விக்கினேஸ்வரன் - இருபாலை கிழக்கு, கோப்பாய் - யாழ்.]

1991ஆம் ஆண்டு யாழ் - தச்சன்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

கிரிதரன் [முத்துலிங்கம் கேதீஸ்வரன் - விநாயகர்வீதி, நல்லூர் வடக்கு - யாழ்.]

1992ஆம் ஆண்டு மணலாறு - முந்திரிகைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் குட்டிமணி/அலோசியஸ் [தங்கப்பன் உதயகுமார்- மகிழமுனை, களுவாஞ்சிக்குடி- மட்டு.]

லெப். செங்கோன்/குணாளன் [தங்கராசா சிவகுமார் - அல்வாய் வடக்கு, அல்வாய், பருத்தித்துறை - யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-6653)

# உலகத்தின் புதிய வல்லரசாக எழுச்சிபெறும் நவ சீனா

இன்றைய சீனா குறித்தான எந்த ஆய்வாளரும் எவ்வித ஆய்வும் அடுத்த நூற்றாண்டின் ஈடுஇணையற்ற வல்லரசு சீனாவே என்கிற முடிவில்தான் போய்முடிகின்றன. சீனாவை நிரந்தரமாகவே அறியாமை வறுமை என்கிற தூக்க நிலையில் வைத்திருக்க முயன்ற மேற்குலகம் இதன் வளர்ச்சியை பெருவியப்போடு பார்த்து நிலைத்திருக்க வேண்டியுள்ளது. விழித்தெழுந்த சீனாவில் இன்று நடைபெற்றுவரும் மாற்றங்களை விரைவிப்பது என்பது இலேசான காரியமல்ல. சீனமக்களின் வாழ்க்கை முறையில் வளர்ந்து வரும் மத்திய வகுப்பின் மனநிலையில் பெருமாற்றம். முன்பு சராசரி சீனக்குடிமகனின் எதிர்பார்ப்பு என்பது தையல் பொறி, மிதிவண்டி, கைக்கடிகாரம் என்கிற வட்டத்திலுள் இருந்தது. இன்று அது வண்ணத் தொலைக்காட்சி, குளிர்பதனப் பெட்டி, மோட்டார் சைக்கிள் ஸ்ரீரியோ, வீடியோ, நிழல்படக்கருவி என எட்டுத்திசையிலும் விரிகின்றது. உலகிலுள்ள பாரிய பல்தேச வர்த்தகக் கம்பெனிகள் யாவுமே இன்று சீனாவில் தொழில் முயற்சிகள் ஆரம்பித்த வண்ணமேயுள்ளன.

இவைபற்றி புள்ளி விபரங்கள் சொல்லும் புதினங்கள் நம்பமுடியாதவையாக இருக்கின்றன. இன்று உலகின் பெரும்பாலான நாடுகள்-யப்பான், செருமனி உட்பட மேற்குலகம், சோவியத்உட்பட கிழக்கைரோப்பிய நாடுகள், மூன்றாம் உலகநாடுகள் எல்லாமே பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கின்றன. ஆனால் சீனா இதற்கு விதிவிலக்கு. அதன் மொத்தப்பொருளாதார வளர்ச்சி நிலையோ ஏறுமுகமாக உள்ளது 1962-ம் ஆண்டு 7 வீதமாக, 1978-ம் ஆண்டு 9 வீதமாக, இன்றோ 13 வீத வளர்ச்சியை நோக்கி நகர்கின்றது. இன்றைய உலகின் ஒரேயொரு பெரும் உயிர்ப்புள்ள வீச்சான பொருளாதார அமைப்பை சீனாவே கொண்டுள்ளது என்கிறது ''நியூஸ்வீக்''. கடந்த வருடம் அமெரிக்காவோடான வருத்தகத்தில் மிகை 1800 கோடி டொலர் (18 பில்லியன் டொலர்) அதே ஆண்டு சீனாவில்குவிந்த வெளிநாட்டு மூலதனம் 3000 கோடி டொலர். 2002-ம்ஆண்டளவில் அமெரிக்காவை, யப்பானைவிட கூடுதலாக உற்பத்தி சீனாவே செய்யும். 2010ஆம் ஆண்டளவில் பெரும் பொருளாதார தொழிற்பரப்பை அதுவே கொண்டிருக்கும். இவ்வாறாக 2020ஆம் ஆண்டளவில் உலகின் முதன்மை வல்லரசாக சீனா மாறும். பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி இராணுவத்துறையிலும் அது தன்னை மிக நவீனமயப்படுத்தி வருகின்றது. நவீன ராடார்கள் நீண்ட தூர நெறிப்படுத்தப்படும் ஏவுகணைகள் என்பன சீனாவாங்கும் முக்கிய பண்டங்கள் ''சீனா புதிதாகத் தேடும் செல்வத்தை மேலும் வளர்ச்சிக்காகவோ அல்லது அதன் இராணுவத்துறையை விரிவாக்கி தன் முதன்மை நிலையை உறுதிப்படுத்தவோ முடியும்'' என்கிறார் மேலைத்தேய ஆய்வாளர் ஒருவர். எனவே கடந்த 10வருடங்களாக யப்பான், யப்பான் என உருப்போட்ட உலகம் இனிமேல் சீனாவின் பெயரையே உச்சரிக்க நேரிடும் என்கிறார் இவர்.

## அகன்ற சீனா:

இத்தோடு இன்னொரு வலுவான காரணியும் இங்கே சொல்லப்பட வேண்டும். அது தான்''அகன்ற சீனா''என்கிற புதுநிலைப்பாடு. இனிவரும் காலங்களில் சிங்கப்பூர், தைவான், கொங்கொங் என்கிற மிக நெருங்கிய சீனவழித் தொடர்புடையநாடுகள் சீனாவோடு மென்மேலும் நெருங்கி உருவாக்கப் போகும் புதிய விரிவான பொருளாதார பிரதேசமே இது. கொங்கொங் 1997ஆம் ஆண்டு பிரித்தானியாவிலிருந்து சீனாவின் கைக்கு வந்து விடும். சிங்கப்பூரோடு மிக நெருங்கிய உறவுண்டு. சிங்கப்பூரின் முதிய அரசியல்வாதி லீகுவான்யூ சீனாவோடு மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணுகிறார். தைவானைப் பொறுத்தவரையிலே பிரதேச அரசியல் வேறுபாடுகள் பலமாக இருப்பினும் இவ்விரு நாடுகட்குமிடையே சிங்கப்பூர் இணைப்புப் பாலமாக செயற்பட்டு வருகின்றது. கொங்கொங்கிற்கு ஊடாக தைவான் முதலீடுகள் சீனாவே சேருகின்றன. எனவே கோட்பாடுகளை விடவும் விளைவுகட்கே முதலிடம் கொடுக்கும் சீனா சமரச நிலைப்பாட்டினை கைக்கொண்டு ஒரு காலகட்டத்தில் தைவானை மீண்டும் இணைத்துக்கொள்ளும் என்ற கருத்து இப்போது முன்வைக்கப்படுகின்றது. இன்று சீனாவில் மேற்கொள்ளப்படும் அன்னிய முதலீடுகள் 80 வீதம் இனவழிச் சீனர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இவர்கள் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் தனியார்துறையின் 70வீதம் தமது கட்டுப்பாட்டிலே வைத்திருக்கின்றனர். கிழக்காசியாவிலே 5கோடி இனவழிச்சீனர் உள்ளனர். யப்பான் கொரியாவைத் தவிர ஏனைய நாடுகளிலே பொருளாதாரத்துறை இவர்கள் கட்டுப்பாட்டிலேஉள்ளது. இப்பகுதிகளில் இவர்களே பொருளாதாரத்தை அசைப்போராகவும் நகர்த்துவோராகவும் உள்ளனர். இன்று யப்பானை விடவும் (தைவான், சிங்கப்பூர்,கொங்கொங்) இவர்களே கூடுதல் முதலீடுகளை தென்கிழக்கு, கிழக்கு ஆசியாவில் செய்ய ஆரம்பித்துவிட்டனர். எனவே இவர்களே அகன்ற சீனாவின் அத்திவாரங்கள்.

## சீன சோவியத் வித்தியாசங்கள்:

எனவே இத்தகையதொரு நிலையை சீனா எவ்விதம் அடைந்தது? இந்த வகையில் சோவியத் எங்கே தவறிழைத்தது? என்கிற இரு வினாக்கள் இன்றைய உலகின் முதன்மை வினாக்கள். 19ஆம் நூற்றாண்டின் பின்னான சீன வரலாற்றை உற்றுநோக்குவோர்க்கு விடைகள் புலனாகும். சீனர்கள் ருஷ்யர்கள் போலல்லாமல் தமது முன்னைய பொருளாதார முறைமையின் தொடர்பினை முற்றாக தூக்கியெறியாமல் முன்னைக்கும் பின்னைக்குமிடையில் ஒருவித சமநிலையைப் பேணி தேவையான எவ்வகை மாற்றங்களையும் செய்யும் வல்லமை படைத்தவராக இருக்கின்றனர். ஆனால் ருஷ்யாவிலோ தொடக்கத்தில் கோர்பச்சேவ் இவ்விடயத்தில் தெளிவாக இருந்த போதும் போகப் போக முன்னைய வரலாற்றை, பொருளாதார முறையை - ஏன், லெனினைக் கூட தூக்கி வீசும் அளவிற்கு அங்கே மாற்றங்கள் படுவேகமாக நடந்து இறுதியில் துன்பியல் நாடகமாகியது. சோவியத் சோசலிசம் என்பது வெறும் உச்சரிக்கும் கோசமல்ல. மக்கள் மத்தியில் அது பயன் தரும் செயல்பாடு என்கிற நம்பிக்கை வேண்டும். அதற்காக தேக்கமான நிலையில் இருக்கும் உற்பத்தி சக்திகளை அவற்றின் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவித்து உரிய வெளியுலக மாற்றங்களுக்குஉட்படுத்தி அதனை வளர்ச்சியுறச் செய்வதே சீனாவுக்கு ஏற்ற சோசலிசம் என்பதே சீனர் முடிவு. இந்நிலையை அடைய அவர்கள் பழைய வரலாற்றினை புதைக்க வில்லை; குற்றம் சாட்டவில்லை. 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் கைகளிலே சீனாபட்ட அவமானம், குறிப்பாக 1830களின் பின் சீனமக்கட்கு அபின் போன்ற போதைப் பொருள்களை பழக்கம் செய்வித்து அவர்களை கேவலமான அடிமைகளாக்க ஐரோப்பியர் முயன்றதும், பின்னர் 1930களின் பின்னர் யப்பானியர் தமது 14 வருட அடக்குமுறை ஆட்சியில் சீனமக்களை நசுக்கிப் பிழிந்ததும் அவர்கள் பெண்களை இழிவுபடுத்தியதையும் சீனர் இன்னமும் மறக்கவில்லை என்றே கூறப்படுகின்றது. குறிப்பாக யப்பானியரோடு இன்று பெருமளவு வருத்தக தொடர்புகள் பேணப்பட்டாலும் யப்பானியர் குறித்து மிகக் கவனமாகவே சீனா செயற்படுவதாக சீன ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யப்பானியர் நான்கிங்கில் செய்த மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட படுகொலைகள் சாங்காய்துறையை அழித்தது. சீனப் பெண்களை பாலியல் தேவைக்காக பல்லாயிரக் கணக்கில் பயன்படுத்தியது; யுனிற் 731 (HarbinsUnit731) போன்ற நச்சுவாயுப் பரிசோதனைக்கு சீனரை பயன்படுத்தியது; இவையெல்லாம் இன்றும் சீன முதியோரின் மனதிலே ஆழமாக புதைந்திருப்பதாக கருதப்படுகின்றது. எனவே இத்தகைய தாக்கங்களின் விளைவாகவே உருவாகிய மாவோ தலைமையிலான சீன பொதுவுடைமைக் கட்சி சியாங்கேசேக்,யப்பானியர் போன்றோர் அடக்குமுறைகட்கு எதிராக பெரும் போராட்டம் நடாத்தி 1934-1949 இடைப்பட்ட காலத்தில் சிதறுண்டு இருந்த சீன விவசாயிகளை இணைப்பதற்காக 6000மைல் நெடும்பயணம் நடாத்தி சீன விவசாயிகளை விழித்தெழச்செய்ததை தனது வளர்ச்சியின் முதல் தொடக்க கட்டமாக நிகழ்வாக இன்றைய சீனா ஏற்கின்றது. எனினும் 1966-1969 இடைப்பட்ட கால கலாசார புரட்சி அதன் பின்னான காலப்பகுதி நிகழ்வுகள் (குறிப்பாக மாவோ நோய்வாய்ப்பட்ட பின்னர்) இன்று நிராகரிக்கப்பட்டாலும் 1976 இன் பின் மாவோ இறக்க, புதிய தலைமுறையின் தலைவராக மாவோவால் முன்னர் நிராகரிக்கப்பட்ட- ஒதுக்கப்பட்ட டென்சியாவோபிங் பதவியேற்றாலும் சோவியத்போல சீனாவின் பழைய வரலாற்றை எண்ணி வெட்கப்படவில்லை. அதை வீசவில்லை. இதுவே இரண்டிற்குமான பிரதான வேறுபாடு.

## படிப்படியாக வளர்ந்த சீனா

இன்றைய சீன நாயகன் 88 வயதான குள்ள உருவுள்ள டெங் நவீன சீனாவின் தொடக்க மனிதன் ஆவார். அவர் குறிப்பாக 1985களின் பின் மேற்கொண்ட ''நவீனமயமாக்கல்'' அக்கால கட்டத்தில் உலகில் பலராலும் கடும் கண்டனத்திற்குள் ளாக்கப்பட்டது. ஆனால் இன்று வரவேற்கப்படுகின்றது. சீனாவின் உயிர்நாடி விவசாயமே என்பதால் அங்கிருந்தே டெங் தனது மாற்றங்களை ஆரம்பித்தார். இதன்படி சீனக்கம்யூன் முறை(சீனப்புரட்சியின் மாண்புமிகு அம்சம்)நீக்கப்பட்டது. விவசாய உற்பத்திப் பொருள்களை அரசே குறித்த விலையில் கோட்டாமுறையில் வாங்கும் முறை நீக்கப்பட்டது. கட்டுப்பாட்டு விலைகள் தளர்த்தப்பட்டது. பலன் சீன விவசாய உற்பத்தி தலையீடுகள் அற்ற புதிய திறனுள்ள வர்த்தகமயமாக்கப்பட்ட புதிய முறைமைக்குள் உட்புகுந்தது. அதுபோலவே நகர்ப்புற கைத்தொழில் வர்த்தக விரிவாக்கத்திற்கும், கிராமப்புற மேலதிகமானோர்க்கான வேலை வாய்ப்பு கருதியும். நாட்டின் தென்பகுதி கரையோரப் பகுதியில் ''விசேட பொருளாதார வலயங்கள்'' (கொங்கொங்கிற்கு அண்மித்ததாக) உருவாக்கப்பட்டன.

**பாலகுமாரன்**

குறிப்பாக குவாங்டோங்(Guangdong) பிரதேசத்தில் இம்மாற்றங்கள் பெரும் அற்புதத்தையே இன்று விளைவித்து பல 'கொங்கொங்கள்' இப்பகுதியில் இன்று உருவாகிவிட்டன.

இவ் வர்த்தக வலயங்கள் செல்வவளம் கொழிக்கும் பகுதிகளாக இன்று சீனாவில் திகழ்கின்றன. சோசலிசம் என்பது பேச்சோடு நிற்கிற விடயமோ அல்லது மூடப்பட்ட பொருளாதார முறைமையில் அரச முதலாளியங்களைப் பேணுவதோ அல்ல என்பதே டெங்கின் நிலைப்பாடு. இன்று சீனாவில் முதல் தலைமுறை தலைவரான மாவோவோடு தொடங்கி இரண்டாம் தலைமுறை தலைவரான டெங்கின் நவீனமயமாக்கும் மறுசீரமைப்பு என்பது சோசலிச கட்டுமானத்தின்படி படிப்படி வளர்ச்சியாக ஏற்கப்படுகின்றது. எனவே உற்பத்தி சக்திகளை கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்தல், அவற்றினை திறந்த சந்தை முறைக்கு தள்ளிவிடல் என்பதே சீனப் பொருளாதாரத்தின் அடிப்படை நகர்வாக இன்றுள்ளது.

இந்நிலையில் இன்றைய சீனாவின் அரசியல் நிலை குறித்து வினா எழும்புகின்றது. நவீனமயமாக்கல் சீர்திருத்தங்கட்கு சனநாயக அடித்தளம் வேண்டும் என்கிற மேற்குலக நிபந்தனையை சீனா இன்று வரை ஏற்கவேயில்லை. இதனால் இன்று சீனாவில் பொதுவுடைமைக்கட்சிஆட்சியிலிருக்க சோவியத்தில் அது தடைசெய்யப்பட்டு விட்டது. இவ்விடயத்தில்தான் கோர்பசேவை மிகக் கடுமையாக சீனா கண்டிக்கிறது.

பொருளாதார சீரமைப்பு நடந்து உறுதிப்பாடு நாட்டில் தோன்ற முன்னர் சனநாயக அரசியல் உரிமைகள் வழங்குவது என்பன தற்கொலைக்கு சமானம் என்பதே சீனநிலைப்பாடு. நல்லஉதாரணம் 1989-ம் ஆண்டு தியென்மின் சதுக்க படுகொலை நிகழ்வு. 1985 பின் டெங்கின் சீர்திருத்தங்களின் பின் மேற்குலக செல்வாக்கின் பின்னணியில் சீன மாணவர் மத்தியிலே சலசலப்பு. பத்திரிகை, பேச்சுச், சுதந்திரம் எனக்கூடுதல் உரிமைகள் கோரப்பட்டன ''சோவியத்துக்கு ஒரு கோர்பச்சேவ் போல் சீனாவுக்கு வேண்டும்' என கோசமிட்டனர். 1989 ஏப்பிரல் மாதம் பல்லாயிரக் கணக்கான மாணவர் சதுக்கத்தில் கூடினர். மேற்குலகோ பெருத்த வியாபாரம் கொடுக்க மாணவர் ஆர்ப்பாட்டம் உச்சம் பெற்றது. இப்படியான நிகழ்வுகள் தனது நாட்டில் தோன்றா என தன்னம்பிக்கையோடு கூறினார் கோர்பச்சேவ். ஆனால்நடந்தது வேறு. இரும்புக்கரம் கொண்டு மாணவர் போராட்டம் நசுக்கப்பட்டது. 30 இலட்சம் பலமிக்க மக்கள் விடுதலைச்சேனையின் பலபிரிவுகள் டாங்கிகள்சகிதம் சதுக்கத்தில் புகுந்து மிகக் கொடூரமான முறையில்இரத்த ஆறு பாய்ந்தோட யூன் மாதத்தின் ஒரு நாள் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி இட்டன. இறந்தோர் தொகை இன்று வரை தெரியாது. 3000— 10,000 வரை கணக்கிடப்பட்டது. உலகமே அலறியது. மேற்குலகோ சீனாவை ஒதுக்கப்போவதாக சூளுரைத்தது. ஆனால் சீனாவோ அசையவில்லை. இறுதியில் இன்று நடப்பது தெரிந்த விடயம். 102 கோடிமக்களைக்கொண்ட பரந்த சந்தை வாய்ப்புள்ள சீனாவை பகைக்க யாருமே தயாராக இல்லை. இன்று அமெரிக்காவின் அதிஉயர் சலுகைகள்(Mostfavoured nation-MNF] பெறும் நாடு சீனா. மேற்குலகம் என்னதான்மனித உரிமைகள் பற்றிக்கூறினாலும் சீனா இவ்விடயம் பற்றி விட்டுக்கொடுப்பதாகத் தெரியவில்லை.

## சீனாவின் மறுபக்கம்

என்றாலும் சீனாவுக்கும் இன்னொரு பக்கமும் உண்டு. எல்லாமே சீனாவில் சரியாக நடப்பதாக கருதமுடியாது. மனித உரிமை மீறல்கள்,சிறைக்கைதிகளை தொழிற்சாலை உற்பத்திகளில் பெருமளவில் ஈடுபடுத்தி உற்பத்தி செய்தல், ஏறும் பணவீக்கம், வேலையின்மை, ஊழல்கள் என்பன தொற்று நோயாக பரவுகின்றன. எல்லாவற்றையும் விட ஈட்டப்படும் வருமானம் சரியாக மறு பங்கீடு செய்யப்படாமையால் வரும்வருமான ஏற்றத்தாழ்வு என்பன புதிய பொருளாதார முறைமையின் சீரழிந்த பக்கங்களாகும். இவற்றினைவிட சீனா என்றுமே தன்னலம் கருதி செயற்படும் விதம்-குறிப்பாக உலகெங்கும் ஆயுதவியாபாரிகளை அனுப்பி எவரென்றும் பாராது எந்த வகை ஆயுதங்களையும் விற்பனை செய்யும் விதம்,முன்பு ஆதரித்த சீனச்சார்பு போராட்ட அமைப்புகளை கைவிட்ட விதம், முன்பு இசுரேல், தென்னாபிரிக்காஇன்று பர்மா பாக்கித்தான் போன்றவற்றோடு உறவுகளை பேணும் முறை எல்லாமே சீனாவுககு எதிராக முன்வைக்கப்பட்டாலும்சீனா இதுபற்றிக்கவலைப் படுவதே இல்லை. அது தன்பாட்டிற்கு செயல்பட்டுக் கொண்டிருப்பதை எவரும் வியப்புடனேநோக்குகின்றனர்

இன்றைய சீனாவின் பெருவளர்ச்சிஎவரையும்விட யப்பானுக்கேபெரும்நெருக்கடி முன்பு தான் செய்த போர்க்கால நாசங்களுக்காக தன்னிடம் நட்டஈடு கேட்டு அவமானப் படுத்தி விடுமோ என்கிற பயம் ஒரு புறம், மிகவிரைவில் தான் அமெரிக்காவுக்கா, சீனாவுக்கா விசுவாசம் என்

( 2ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# விடிகின்ற தேசத்தில்....

**கோளாவிலூர் கிங்ஸ்லி**

வஸ் வந்து நின்றதும் வள்ளியாச்சி தரிப்பிடத்தை விரைந்தாள். ஒரு கையில் காசுப் பேணி; மறு கையில் ஊண்டுகோல். ஒரு ஐம்பது ஐம்பத்தைந்து வயதிருக்கும். எலும்பும் தோலுமாக, கறுப்பு உருவம். இனிக் கறுப்பதற்கு இல்லை. புகை நிறப் புடைவையொன்றுஉடுத்திருந்தாள். அது முன்பு சிவப்பு நிறமாக இருந்திருக்க வேண்டும். அதிலும் சில இடங்களில் கிழிவுகளைக் கையால் கூட்டிக் கூட்டித் தைத்த தடங்கள்...

கடைசி பஸ் அதுதான். AKP 34. மட்டக்களப்பு -அக்கரைப்பற்று என்று எழுதிய வோட் தெரிகின்றது. வள்ளியாச்சி ஒருமுறை தடுக்கி விழப் பார்தது மீண்டும் வஸ்ஸினுள் ஏற முனைகிறாள். பேணியைக் குலுக்கி குலுக்கி நீட்டுகிறாள். களைபபுடன் வந்த பயணிகள் சலித்த முகத்துடன் விலகி விலகிச் செல்கின்றனர். ஒரேயொருவர் மட்டும் ஐம்பது சதக் குற்றியைச் சல... என பேணிக்குள் போட்டார். அவர் ஏதோவொரு உத்தியோகம் பார்ப்பவராகத்தான் இருக்க வேண்டும். கடைசியாகவும் அவர் தான் இறங்கிச் சென்றார்.

பஸ்ஸிலிருந்து மெதுவாக இறங்கினாள். பயணிகள் கொஞ்சமும் தாமதிக்கவில்லை. மாலையாகிக் கொண்டிருந்ததால் சனங்கள் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டிவிட்டனர்.

இப்பொழுதெல்லாம் இந்த நகருக்குள் இரவு 7.00 மணிக்கு மேல் சனத்தைக் காண முடியாது. தெரு நாய்கள் மட்டும் சுதந்திரமாக அங்கொன்றிங்கொன்றாக உலாவும். சேர்த்து... இரும்புத் தொப்பி அணிந்த பேய்களும் அலையும். ( ...) மக்கள சுதந்திரமாக வாழுகின்ற நகரமாம் இது. சீ...அவர்கள் நரகம் என்று மாற்றிக் கொள்ள வேண்டும். அது தான் பொருத்தம். பேய்கள் திரிகின்ற சுடுகாடு. ஆனால் இருள் சூழ்ந்த இடமில்லை. பகல் போன்ற வெளிச்சங்கள் மத்தியில் நவீன காலத்து இவ்வெறிப் பேய்கள்....

இரவாகிவிட்டால் பக்கத்து வீட்டுக்கும் போகக் கூடாது. அப்படியில்லை அவசியம் ரோட்டுக்குப் போக வேண்டும், உயிர் போகும் வருத்தம், ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வேண்டும் என்றால்; அது ஒரு வினோதக் கதையைப் போன்று இருக்கும்.

ஊரில் உள்ள சனங்கள் கூட்டமாக வாகனங்கள் எதுவுமின்றி கால்நடையில் இருவர் பெரிய தீப்பந்தங்களுடன் முன்னே செல்ல, நோயாளியைத் தூக்கிக் கொண்டு சனக் கூட்டம் தீப்பந்தங்களை உயர்த்திய வண்ணம்... இடைவழியில் பொயின்றுக்குப் பொயின்ற் அதிரடிப் படையீன் அதட்டலின் வேகம் நோயாளியை முடித்தாலும் புதினமில்லை.

''அக்கரைப்பற்று டவுணெண்டால் கொழும்பென்ன பிச்சதான் வேண்ட வேணும்.

அன்பு கொட்டேல்ல சாப்பிடுற உழுந்து வடை மாதிரி சுவை இன்னும் வேறிடங்கள்ள நான் காணல்ல. டீயும் அப்பிடித்தான்'' ஊரில் சில ஊர்சுற்றிகளின் சந்திக் கதைகள்... ஏன் அப்பா கூட இதை அடிக்கடி சொல்லுவார்.

சண்முகநாதன்ஸ்ரோஸ்க்கு இரவு பத்து மணிக்குப் போனாலும் முண்டியடிச்சி, மோதித்தான் சாமான் வேண்ட வேணும். ஒவ்வொரு நாளும் மரவளளிக்கிழங்கு தொடக்கம் வாழைக்குலை குலையாய் வந்து குவியும் சந்தையில். ஒவ்வொரு குறிப்பிட்ட ஊருக்கும் ஒவ்வொரு மரக்கறிப் பயிர் உற்பத்தியில் பேர் போனது.

பெஸ்ட், செக்கன்ட், தேட் சோ என்று விடிய விடியச் சினிமா. கொழும்பில் வெளியான படம் அதே நாளில் அக்கரைப்பற்று சாரதாவில் ஓடும். வெளியூரில் இருந்து வான், மினிபஸ் பிடித்துப் படம் பார்க்க வரும் சனம்... சொல்லி மாளாது சொந்த ஊர்க்காரரர் சனநெரிசலில் படாமல் தேட் சோவுக்குத் தான் போறது.

இதெல்லாம் எண்பத்து நாலுக்கு முன்னைய பழங் கதைகள். எண்பத்திஐந்திலேயே அந்தத் தியட்டர்கள் தரைமட்டமாயிற்று. இன்று அதன் தடயங்களும் இல்லை.

பக்கத்தில் இருந்த ஒரு மின் விளக்கு சில்லென ஒளிர்ந்த போதுதான் கண்ணுக்கு இருட்டி விட்டது தெரிந்தது. ஆளையாள் தெரியாத நேரம், இதை எங்களுரில் 'கருக்கல்' என்று சொல்வார்கள். அங்கே சடுதியாக திரும்பியபொழுது தான் இரண்டு பஸ்ஸுக்கு இடையில தெரிகின்ற ஒரு சீமெந்துக் கட்டில் அமர்ந்து கொண்டு தனது முந்தானையை விரித்து காசைக் கொட்டி வள்ளி எண்ணிப் பார்ப்பது தெரிந்தது. அதில் 10.25 சதம் சேர்ந்திருந்தது. இதற்கே நேரம் பிடித்து விட்டது அவளுக்கு.

காலையில மரவள்ளிக் கிழங்கு வேர்தட்டிக் கொடுத்ததற்கு கிடைத்த இரண்டு காவயேறிய கிழங்குத்துண்டு ஐந்து ரூபாய் காசு; அந்தக் காசையும் முந்தானை முடிச்சில் இருந்து அவிழ்த்தெடுத்தாள். எல்லாமாக 15 25 சதம் சேர்ந்தது.தான் வைத்திருந்த பன்பின்னவினாலான பழைய பையினுள் இரண்டு கிழங்குதுண்டையும் போட்டுக் கொண்டு எதிரே இருக்கும் சில்லறைக் கடைக்குள் நுழைந்து பாண் ஒன்றரை இறாத்தலும், தேயிலையும், சீனி காற்கிலோவும் வேண்டி பையினுள் போட்ட பின் 'எவ்வளவுமனே காசி'' ...... என்று கேட்டாள். பதினாலு ரூபா ஐம்பது சதம் என்று கடைக்காறன் சொன்னதும் காசு முழுவதையும் அள்ளிக் கொடுத்தாள். மேசையில் போட்டு மளமளவென எண்ணிய கடைக்காறன் 75 சதத்தை மிச்சம் காட்டினான். 75 சதத்திற்கு என்ன வேண்டுவது ...... ஒருகணம் யோசித்தாள், பேரன் கேட்கும் பல்லிமிடடாய் ஞாபகம் வந்தது ''ஆ... அதுக்கு பல்லிமுட்டாசிதாமனே''..... வள்ளியாச்சியின்தொனியில்அனுதாபம் இருந்ததால் எதையோ முணுமுணுததுக் கொண்டாலும ஒரு சிறிய சுருளுக்குள் போட்டுக் கொடுத்தான் கடைக்காரன் இன்றைக்கு மிகவும் நேரம் போய் விட்டதை கடையில் இடையிடையே உதட்டுக்குள் கதைத்துக் கொண்ட வள்ளியாச்சி சட்டென வெளியில்வந்தாள்.கண்ணைக்கசக்கி விட்டு உற்றுப் பார்த்தாள். என்னவோ மாதிரியாயிருந்தது மங்கிய கண்ணுக்காகவோ இல்லைஇன்றுகாலையிலிருந்து சாப்பிடவில்லை என்பதனாலோ மின்விளக்கெல்லாம் ஒளிக்கதிர்களை வீசியெறிந்து சுற்றி வருவதுபோல் தெரிந்தது. எந்தத் திசையில் போகின்ற பாதைஉள்ளது என்பதை சுற்றுமுற்றும் பார்த்து கட்டடங்களை வைத்து கண்டுபிடிக்க வேண்டிய நிலை.

சனப்புழக்கம் முற்றாக குறைந்து விட்டதனால் ஏற்பட்ட அச்ச உணர்வு மனதைக் குடைந்து தொலைத்தது. பதிலாக கறுப்பு வாகனங்கள் பேய்களை ஏற்றிக் கொண்டு ஓ... எனஅலறியபடிபோவதும் வருவதுமாக பறந்து திரிந்ததால் மேலும் பீதி...

இவ்வளவு நேரமாகும்வரை சுணங்கிவிட்டதை எண்ணி தனக்கு தானே கடிந்துகொள்கிறாள். இதேமாதிரி மீண்டுமொருதடவை...சீ ..கூடவே கூடாது எச்சரித்துக்கொண்டு வெறிச்சோடிய ரோட்டின் நடுவால் வேகமாக நடக்கிறாள்.

இன்னும் கொஞ்சத்தூரம் தான் வெளிச்சமாய்இருக்கும்; போகப்போக கண்ணில குத்தினாலும் தெரியாத இருட்டு. மூனறு கட்டை நடக்க வேண்டும்.எப்படியும் போயாகவேண்டும். போகாவிட்டால் ..அங்கு அந்த ஓட்டைக்குடிசைக்குள் மூன்று உயிர்கள் வழிமேல் விழி வைத்துகாத்துக்காத்துகிடந்து சோர்ந்து போயிருக்கும். தாயும் இரண்டு குஞ்சுகளும் வள்ளியாச்சி போனால்தான் இன்றைக்கு சாப்பாடு. இன்னும் கொஞ்சம் எட்டிவைக்கிறாள்.

சிங்களப்பேய்களை கடந்து போவதை நினைக்கநினைக்க வேர்த்துக் கொட்டியது. பயத்தினாலோ என்னவோ பசிக்கவில்லை. ஆனால் களைப்பாக இருந்தது. பேரன்மார் இருவரும் மருமகளை படாப்பாடு படுத்திவிட்டு இந்நேரம் நித்ரையிடம் போயிருப்பார்கள். 'பசிக்குது' பாட்டி எங்க; பசிக்குது' பாட்டி எங்க' என்றவண்ணம்தாய்க்காறியைகொன்றே இருப்பார்கள். மருமகள்... சாமமானாலும் என்னையே காத்திருப்பாள். பக்கத்து வீட்டில பச்சத்தண்ணியும் குடிச்சு பழக்கமில்லை.(......)ஒருபெருமூச்சை சத்தமாக விட்டாள் வள்ளியாச்சி நடந்தவாறே. மீண்டும் எண்ணங்கள் அசைபோட நடக்கிறாள்.

''அவள் கொடுத்து வச்சது அவ்வளவுதான். ஆமிக்காரன் மட்டும் என்ர பிள்ளையை சுடாமல் இருந்திருந்தா எவ்வளவு சந்தோசமாக இருப்பாள் இளவயசு... பாவம்.'' அவன்ர நினைவுக்கு அவனையே உருச்சிவச்ச மாதிரி இரண்டு ஆண் குஞ்சுகள் இப்பவே தகப்பனை கேட்டு கேட்டு கழுத்தைப் பிடிக்கிறார்கள். உங்கட அப்பா சாமியிடம் போயிருக்கார், என்றால் நம்புவதில்லை. ஆமிக்காரன் அப்பாவை சுட்டுப்போட்டான் என்கிறார்கள். இந்தகாலத்து சிறுசுகளுட்டக் கூட பொய் சொல்லவே ஏலாமல் இருக்கு. கொஞ்சம் வளந்திட்டா இதுகளுக்கு என்ன நடக்குமோ என்பதை எண்ணிப்பார்க்கவே பயமாக இருந்தது. (... ... ) மீண்டும் ஒரு பெருமூச்சுடன் சிந்தனை கலைந்துவிட்டது. ஒரு நிமிடம். நிதானமான நடை தொடர்கிறது. ''இரண்டு கட்டை நடந்துவிட்டதை இருட்டென்றாலும் எதிரில் வருகின்ற நாற்சந்தி காட்டித் தந்தது!, இன்னும் ஒரு மைல் தான்... என்றாலும் அவ்வளவும்தான் அச்சத்தைக் கொடுக்கின்ற பாதை. ரோட்டின் இருபக்கமும் பற்றைகள். சனமே இல்லை. இதுக்குள்ள தான்இராணுவமும் வந்துபடுக்கிறவன். எத்தினை சனங்களைத்தான் இதுக்குள்ள பூந்து படுத்துக் கொண்டு இரவோட இரவா கொன்றிருக்கிறான் பிணந்தின்னி. ஆனாலும் நல்லா வேண்டிக் கட்டியும் இருக்குதுகள் சீதேவிகள்; பிள்ளையள்ர கையால.

தூரத்தில்இருந்துதெரிகின்ற வாகன வெளிச்சம் அவள் சிந்தனையை திசைதிருப்பி விட்டது வருவது அதிரடிப்படையைதவிர அந்தநேரத்தில் யாராக இருக்கமுடியும். வெளிச்சத்தில் இருந்து மறைவது என முடிவெடுத்ததும் கூட அருகில் வந்துவிடும் போல் அதன் வேகம. இனிமறைவது சாத்தியமில்லை பகல்போன்ற வெளிச்சத்தில் என்ன செய்தாலும் அவனுக்கு தெரியும். அவன் சுடுவது வேறு அதுகூட இப்பொழுது சாதாரணம். ஆனால் கேம்புக்கு கொண்டு போவான், அடிப்பான், அதட்டுவான் கிமவி எண்டாலும் இரவில் அவனுக்கு தமிழரெல்லாம் புலிதானே...

வேகமாக வந்த வாகனம் சற்றுத்தூரத்தில் நின்று விட்டது வாகன வெளிச்சத்தில் ஊசி கூடத் தெரியும். வள்ளி முன்னோக்கிச் செல்ல முடியாமல் தடுமாறினாள். நின்றாலும் சந்தேகம். ரோட்டின் இருமருங்கிலும்படுத்துக் கிடந்த இருள் உருவங்கள் வாகனத்துக்கு அருகில் வந்து வாகன இரைச்சலையும் மிஞ்சி யமபாசையால் எதையோ சொல்லிக் கத்தி கூச்சலிட்டனர். அவர்கள் மது அருந்தியிருக்கவேண்டும். அதில் இருவர் வாகனத்தில் ஏறிக்கொண்டனர். வாகனம்:ரக்இல்லை-ஜீப் தான்ம்ம்...என்று சத்தமிட்டுக் கொண்டு புறப்பட கிழவி ரோட்டை விட்டு நன்றாக ஒதுங்கி அப்படியே நின்றுவிட்டாள். ஒளி கண்ணைக்குத்தியதால் முகம் கொடுக்காமல் குனிந்தபடி நின்றாள் அவள் பதற்றமும் பதபதவென நடுங்குவதும் அப்படியேதெரிந்தது. ஆனால் ஜீப் வேகமாக அவளையே நோக்கி சென்றபோது :''திக்''கென்றது. அதே செக்கனிலேயே,''மாரித்தாயே''... என்று பெலக்கக்கத்திக் கொணடு அந்த ஜீப்பை விட உயரமாக பறந்து கீழே பற்றைபுல்லுக்குள் விழுந்தாள்

அவள் சாகவில்லை அனுகுவது போன்ற சத்தம் கேட்டவண்ணம் இருந்தது. இதேவேளை ஜீப் சற்று தூரம் போய் நின்று; மீணடும் அதே கதியில் பின்னோக்கி வந்தது நின்றதும் சடாரென கதவைத் திறந்து கொண்டு இறங்கிய இரண்டு இருள் உருவங்கள்:- வள்ளி உணர்விழந்து குப்புறக்கிடந்த போது சூக்காலால் புரட்டி விட்டன. அவள் அனுகுவது நின்றுவிடவில்லை. அவளைப் பார்த்து ஒருவர்: ''லொக்கு கொட்டி'' என்று கூறிய தொனி, அவர்கள் மதுபோதையில திளைக்கின்றனர் என்பதைக் காட்டியது.மற்றவரின் சூக்கால் வள்ளிகிழவியின் நெஞ்சினை நோக்கி ஓங்கி ஒருமுறை உதைத்த போது அவள் எழுப்பிய ஒருவகைச் சத்தம்; அதன் அர்த்தம் என்னவோ...? அதுகடைசிச்சத்தம் என்பது மடடும் தெரியும். அந்த ஜீப் புறப்பட்டது. அவள் கொண்டு வந்த உணவுப்பையை இன்னும் கையில் இறுக பற்றியபடி வள்ளியாச்சி கிடந்தாள்.

## முட்டை

முட்டை வளரும் குஞ்சின் கருவிற்கு ஒரு முழுமையான உணவு, மனிதனுக்கும் முக்கியமாக குழந்தைகளுக்கு இது ஒரு சிறந்த நிறை உணவாக அமையும்.

ஒரு சாதாரண (60 கிராம் எடையுள்ள) முட்டையில் 7 கி. புரதம், 6 கி கொழுப்பு,30 மி. கி சுண்ணாம்பு, 1.5 மி. கி இரும்புச் சத்தும் 80 கிலோ கலோரி சக்தியும் உண்டு.

வெள்ளைக்கருவில் 13வீதம் புரதமும், மஞ்சள் கருவில் 16.6 வீதம் புரதமும் உண்டு. இதைவிட ஏ, டி,வி முதலியவையும் உண்டு.

மஞ்சள் கருவின் நிறம் அதிகரிக்க அதன் உயிர்சத்தின் செறிவும் அதிகரிபபது இல்லை. கோழியின் உணவில் கலந்திருக்கும் பச்சை இலையின் அளவைப் பொறுத்தே மஞ்சள் கருவில் நிறம் இருக்கும். ஊர்க்கோழியின் முட்டைக்கும்கூட்டில் வளர்க்கும கோழி முட்டைக்கும் இடையில் போசாக்கைப் பொறுத்த வரையில் வித்தியாசம இல்லை.

வெள்ளைக் கருவில் கிருமிகளை அழிக்கும் சக்தியுடைய புரதம் உண்டு.

ஒரு முட்டையில் 250 மி. கி கொலெஸ்டறோல் உண்டு. இது குருதிக் குழாய்களில் படிந்து வேறு காரணிகளுடன் சேர்ந்து பிற்காலத்தில் மாரடைப்பு போன்ற குருதிக் குழாய் அடைப்புடன் சம்பந்தப்பட்ட நோய்களை உண்டாக்கலாம். ஆகவே இருதய நோய் வரும் சாத்தியம் கூடுதலாக உள்ள இளைஞரும் நடுத்தர வயதினரும் ஒரு வாரத்திற்கு 2 - 3 முட்டைக்கு மேல் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

# சீதனத்திற்கு சாவுமணி அடிப்பதற்கு தனியுடமை சமுதாயம் மாறவேண்டும்

திரு. க. தணிகாசலம் ஆசிரியர் அவர்கள் சீதனம்; பயனடைவது பெண்கள் பாதிக்கப்படுவது ஆண்கள் என்ற தலைப்பில் தனது அநுபவத்திற்காக எழுந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

பாவம் மனிதர்; ஒரு கருத்தை முன்வைக்கப் போய் இப்போது பலருடைய பல்லுக்குப் பதமாகிக் கொண்டிருக்கிறார்.

இப்படிச் சீதனம் வாங்குவதும் கொடுப்பதும் பல இடங்களில்; மட்டங்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இதுவரை விவாதத்தில் கலந்து கருத்துக்களை முன்வைத்த அனைத்துப் பேர்களதும் இனிமேலும் கருத்துக்களை சொல்ல விழைபவர்களும் சொன்ன - சொல்லப்போகின்ற கருத்துக்கள் ஒன்றும் உலகத்தில் இல்லாத-எதார்த்தத்திற்குப் புறம்பானதாக இருக்கப் போவதில்லை.

அதிலும் அவரவர்கள்சொல்கின்ற கருத்துக்கள்இன்னொரு சாரரால் மேலெழுந்த மேனியில் புறக்கணிக்கப்பட்டிருப்பினும் முற்று முழுதாக தூக்கி எறிந்து விடவும் கூடியவைகள் இல்லை என்பதை நாமுணர வேண்டும்.

ஏனெனில் ''உலகம் பலவிதம்'' என்ற அடைமொழி ஊடாக உலகத்து வாழ்கின்ற மக்கள் கூறுகளை அளவிட்டு உணர்ந்து கொண்டால் அவரவர்களின் வாழ்நிலை-சமூகத்தளம் அனுபவங்ளே அவர்களூடாக வெளிப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இதில் சாணக்கியன், பாரதிப்பிரியா, இளையவன், திருமதி அன்னபூரணி இராசையா நான்-மற்றும் இன்னும் கருத்துக்களை முன்வைப்போர்கள் அனைவரையும் ஒரே திராசில் நிறுத்திவிடமுடியாதல்லவா?

ஆக - இந்தப்பிரச்சினையில் ''பூனைக்கு மணிகட்டுவது யர்?'' என்ற கேள்விதான் எழுகின்றது. அதேவேளை-

உலகம் அடங்கிலும் என்றில்லாமல் எங்கள் சிறிய தமிழீழப் பிரதேசம் அடங்கிலும் வாழ்கின்ற மக்களின் சரி அரைவாசிப்பேர்களுக்குமேலானோர் இந்தச் சீதனப் பிரச்சினையே இல்லாமல் ஆண் பெண் தாம்பத்திய வாழ்வை வரிந்து கொண்டு வாழ்ந்து வருவதை எம்மால் மறுத்து விட முடியுமா?

ஆண் - பெண் தாம்பத்திய வாழ்வில் சீதனம்: 'பெண்களின் வாழ்க்கையைப் பாழடிக்கின்றது - அல்லது ஆண்களின் வாழ்நாளை உலைக்கிறது' என்ற நிலைப்பாட்டையும் மறுத்து விடுவதற்கும் இல்லை.

என்றாலும் ஆண் - பெண் தாம்பத்திய வாழ்வை நிர்ணயிப்பது 'சீதனம்' தான் என்பதை எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம்?

உதாரணத்திற்கு எங்களது கண் முன்னாலேயே எத்தனை திருமணங்கள் 'சீதனம்' என்னும் 'பளுவுக்கும் - கொடுமைக்கும்' அப்பால் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இதற்குக் காரணம் இல்லாமை என்றாலும் ஆண், பெண் தாம்பத்திய வாழ்வை நிர்ணயிப்பது 'சீதனம்' தான் என்ற வாதப் பிரதிவாதங்களைத் தூக்கி வீசிவிடவில்லையா?

தனியுடமைச் சமுதாயப் பரப்பில் சீதனம் கொடுப்பதும் - வாங்குவதும் வாழ்நிலையை ஸ்திரப்படுத்தவும்-வளர்த்துக் கொள்வதுமாகக் கொள்ளப்படுவதாலேயே; அதனை உருவாக்கி வைத்திருக்கும் மனித சமூகத்தில் மிகக் குறைந்த தொகையினர் அதனால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேல் மட்டத்தவர்களுக்குச் சீதனம் வழங்குவதில் பிரச்சினை இல்லை. கீழ் மட்டத்தவர்களுக்கு இல்லாமை காரணமாகப் பிரச்சினை எழுவதில்லை. மத்திய தர வர்க்கத்தினருக்கே இந்தப் பிரச்சினை பூதாகாரமாக இருந்து வருகிறது என்று கருத்து வைக்கப்பட்டது.

மத்திய தர வர்க்கத்தினருக்கு எதனால் சீதனப் பிரச்சினை பூதாகாரமாக எழுகின்றது?

இல்லாமைதானே காரணம். அப்போ, மத்திய தர வர்க்கம் என வர்ணிக்கப்படும் பகுதியினர் கானல் நீரை உண்மையான நீரெனக் கண்டு மயங்குபவர்கள் என்றுதான் கொள்ள வேண்டும்.

இ க்கையை இழந்த நிலையிலும் உயரப் பறக்க முயற்சிக்கும் நிலையினர், இவர்களைத் திரிசங்கு சொர்க்கத்தில் வாழ்பவர்கள் என்று கருதுவதில் தவறில்லையல்லவா? இவர்களை விடஇவர்களின் தரத்தை உடைய இவர்களால் கீழ் வர்க்கத்தினர் என்று மட்டம் தட்டப்பட்டு நோக்கும் ஒரு பகுதி உழைப்பையே நம்பகமாகக் கொண்டு வாழ்க்கைத் தளத்தை அமைத்துக் கொள்கின்ற மக்கள் இந்த உலகத்துக்குக் கிடைத்த ஆரோக்கியமான பிரஜைகளென்று துணிந்து கூறலாம்.

மத்திய தர வர்க்கம் என்று கூறிக் கொண்டு மேல்தட்டு வர்க்க வாழ்க்கைக்கு இலக்கு வைக்கும். கூட்டத்தினரிடையேஇந்தச் சீதன முறைமை பூதாகாரமாக விளங்கி வருகிறதென்றால் மிகையில்லை.

கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதி போன்ற இன்னோரன்ன மனித மேம்பாட்டுத் தேவைகளை தேட வேண்டியது சராசரி மனித தேவைகள்தான்.

அதற்காகதனது உழைப்பை மூலதனமாக்காமல் அதில் நம்பிக்கை இழந்த நிலையில் இன்னொருவனின் உழைப்பில் தானும் தனது குடும்பமும் சமூகமும் உயரப்பார்ப்பது எத்தகையது?

இதனைத்தான் மாக்ஸ் சித்தாந்தம் சுரண்டல் வர்க்கம் என்று வர்ணிக்கிறது. ஒரே மனித சமுதாயத்தில் மனிதன் எடுக்கின்ற நிலைகளை இவ்வாறு நான்கு விதமாக வகுத்துப்பார்ப்பதும் தனியுரிமை சமுதாயப் பரப்பில் தான்.

மனித சமூகத்தில் அவனுக்குப் பூதாகரமாகத் தோன்றும் பிரச்சினையாக 'சீதனம்' மட்டும்தான் என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியாது.

இன்றும் தொழில் பிரச்சினை, சம்பளப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, கல்வி, நிலம்,வேலை வாய்ப்பு என்று சகல துறைகளிலும் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

சீதனப் பிரச்சினை அதில் ஒரு அலகு மட்டுமே!

முற்று முழுதான ஒரு மாற்றத்தினூடாக இந்தப் பளுக்களையும், கொடுமைகளையும் வென்றெடுக்கத்தான் தமிழீழத்தில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பிரச்சினைகளில் இருந்து விடுபடத்துடிக்கும் அனைத்து மக்களும் போராட்டத்தில் ஒன்றிணைவதின் மூலம்தான் விடிவைக்காணமுடியும். ஒன்றில் தப்பினால் இன்னொன்று என்ற விடிவில்லாத தனியுடமைச் சமுதாயம் மாறித் தமிழீழத்தில் உலகில் இன்று எங்கும் தோன்றி இராத பொதுவுடமைச் சமுதாயம்மேலெழ ஒன்றிணைவோம்!

அதனூடாக மனிதனுக்குத் தீராத தொல்லையாக விளங்கும் சீதனப் பிரச்சினைக்குச் சாவுமணி அடிப்போமாக!

**தேவி பரமலிங்கம்**

---

# புனிதமான இல்லற வாழ்வு முதலீடு வாங்கும் வர்த்தகமல்ல

**14.5.93** வெள்ளி மஞ்சரியில் திரு. இளையவனின் 'தாம்பத்திய வாழ்வை ஆரம்பிக்க சீதனம் என்ற முதலீடு அவசியம்' என்ற விவாதம் சிந்தனையுடன் கூடியதாக இருந்தாலும் எனது கருத்துக்களோடு அவை மாறுபடுவதால் அவற்றை சீரணித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

இல்வாழ்க்கைக்கு பொருள் முக்கியம் தான். அதற்காக 'பொருளில்லாருக்கு இவ்வுலகம் இல்லை' என்ற வள்ளுவர் வாக்கை இல் வாழ்க்கைக்கு ஒப்பிட்டிருப்பது நியாயமாகப் படவில்லை. புதுவாழ்வு ஒன்றை ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் ஆரம்பிக்கிறார்கள். அதில் இருவரும் நான் பாதி நீ பாதி என்ற உணர்வுடன் தான் காலடி வைக்கிறார்கள். இதற்கான முதலீட்டை ஏன் பெண்ணிடம் இருந்து மட்டும் பெற வேண்டும் என இவர் கருதுகிறார். இருவரும் வாழ்க்கையைத் தொடங்கும் போது இரண்டு பேரும் சேர்ந்து தானே முதலீடு செய்ய வேண்டும்?

வள்ளுவர் வாய் மொழியை பெண்கள் பக்கம் மட்டும் சுமத்திவிட்டு 'அப்பாடா' என்று இருப்பது எந்த வகையில் நியாயம்? ஒரு சிறிய வியாபாரம் தொடங்குவதானால் கூட அதில் முதலீட்டாளர்கள் இருவரும் தன் முதலீடு செய்ய வேண்டும் அதற்காக திருமணம் என்ற புனித வாழ்வை இங்கு வியாபாரதத்திற்கு ஒப்பிடுவது நல்லதாகப்படவில்லை. குடும்பத் தலைவன் தனது வருமானத்துடன் மனைவி உத்தியோகம் பார்த்தால் அவளின் வருமானத்தையும் கொண்டு குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே புத்திசாலித்தனமாகும். அதனை விடுத்து அப்பாவிப்பெண்களை வருத்தி முதலீடு கேட்பது அழகல்ல. நியாயமும் அல்ல.

பெண்ணை விட பொருளையே காதலிக்கும் ஆணினத்தின் பொருள் மோகம் மேலோங்கி நிற்கும் இன்றைய காலத்திலோ, எதிர் காலத்திலோ முதலீடு இல்லாவிட்டால் பெண்கள் தாம்பத்திய வாழ்வில் பிரவேசிக்கவே முடியாதா? இது பெண்களை இழிவுபடுத்துவதாகவும், அவர்களின் கௌரவத்தை அசிங்கப்படுத்துவதாகவும் அமைகிறது. ஒரு சின்ன மாறுதல். இனி விளம்பரத்தில் மணமகள் தேவை என்று கோருவதை விடுத்து, தாம்பத்திய வாழ்வுக்கு இவ்வளவு தொகை முதலீடு செய்யக்கூடிய பெண் தேவை என்று குறிப்பிட்டால் விளக்கமாக அமையும். ஒரு பெண்ணின் சிறப்பும் தகைமையும் அவளுடைய பண்பு, ஆற்றல், ஒழுக்கம், அறிவு, ஆளுமை ஆகியவற்றால் தீர்மானிக்கப்படாது 'முதலீட்டால்' மட்டும் தீர்மானிக்கப்படுவது மிகவும் மன வேதனைக்குரியது.

எமதுமண்ணில் இன்று பெண்கள் வீரகாவியம் படைத்து வரும் போது இந்த சீதன விஷக்கிருமியோ தனது போக்கில் பரவி வளர்ந்து வருகின்றது. சீதனம் இங்கு கோரவடிவத்தைப்பெற்றுவிடவில்லை என்றும் நாம் வாளா திருந்தால் நிச்சயமாக நாளை இக்கிருமியால் நோய் உக்கிரமான நிலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையேஇல்லாமல் போய்விடும் நிலை ஏற்படலாம்.

சீதனத்தால் பெண்கள் பாதிக்கப்படுவது இல்லை. அவர்களின் விருப்பிற்கேற்ப வரனைத் தேடுவது ஆண்களின் சுமையாக அமைந்து விடுகிறது என்று 30-4-93 வெள்ளிமஞ்சரியில் திரு. தணிகாசலம் ஐயா குறிப்பிட்டார். இவரிடம் நான் ஒன்று கேட்கிறேன். தந்தை இல்லாத குடும்பங்களில் தாய் முன்னின்று தனது பெண்ணின் திருமணத்தை நடத்தவில்லையா? அல்லது தந்தை இல்லாத குடும்பத்தில் உள்ள பெண்கள் மணம்முடிப்பதில்லையா? ஏன் வீணாக வரிந்து கட்டிக் கொண்டு உங்கள் தலையில் சுமையைப் போடுகிறீர்கள்?

எத்தனை குடும்பங்களில் குடும்பத் தலைவி, மூத்தபெண் தந்தையிருக்க, சகோதரன் இருக்க, கணவன் இருக்கக்கூட தானே உழைத்து குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். தனது வாழ்வைத் தியாகம் செய்து சகோதரிகளை வாழ வைக்கும் பெண்கள் இல்லையா? ஏன் இவற்றையெல்லாம் நீங்கள் கண்டு கொள்வதில்லை? அல்லது கண்டும்காணாமல்இருக்க முற்படுகிறீர்களா?

எவ்வாறாயினும் இப்பிரச்சினைக்கு பரிசோதனை அனுபவங்களில் இருந்து நாம் ஒரு தெளிவிற்கு வரலாம். அதாவது சீதனத்தை பேச்சிலும் எழுத்திலும் எந்த வடிவங்களில் சீரமைத்தாலும் ஆண்களின் மனவுலகில், பெண்கள் பற்றிய அவர்களது கருத்துலகில் ஆழமான மாற்றங்கள், திருப்பங்கள் நிகழாமல் முடிவு சாத்தியமாகப் போவதில்லை. ஆண்சமூகம்நினைத்திருந்தால் இத் தொடர் கதைக்கு எப்போதே முற்றுப் புள்ளி வைத்திருக்க முடியும்.

**வினோதினி**

# சீதன நடைமுறையை ஒழிப்பதற்கு சட்டம் கொண்டு வருவது அவசியம்

இன்று தமிழீழத்தில், தேசிய விடுதலைக்கான போராட்டம் முனைப்படைந்து கொண்டு வருகின்ற காலத்தில் ''சீதனத் தடைச் சட்டம்'' நடைமுறைக்கு கொண்டுவரப்படுதல் என்பது வரவேற்கத்தக்க ஒன்றாகவே இருக்கின்றது. தேசியப் போராட்டம் நடைபெறும் அதே காலத்திலேயே எமது தரப்பிலான உரிமைகளும் பெறப்படவேண்டும். அதுவும் போராட்டத்தில் சரிபாதி பங்கை வகிக்கும் பெண்களின் பிரச்சினைகள் வாயளவில் மட்டுமன்றி நடைமுறையிலும் தீர்க்கப்படவேண்டும். இந்தவகையில் ''சீதனதடைச் சட்டம்'' அமுலுக்கு கொண்டு வருதல் என்பது தமிழீழப் பெண்கள் வரலாற்றில் ஒரு சிறப்பம்சமாக அமைகின்றது.

சீதனத் தடைச் சட்டத்தினை ஆ ரிப்பது என்ற வகையில் அதற்கான சில விளக்கங்களை இங்கு நான் முன் வைக்கின்றேன்.

ஆரம்பத்தில் பெற்றோர்கள் மேலதிகமாக உள்ள சொத்துக்களை வீட்டில் வாழும் பெண்களுக்கு எழுதிக் கொடுத்து அதனை சீதனம் என்று மணம் முடித்துக் கொடுக்கும் போது வழங்கினர்.

அன்று வாழ்ந்த சூழல் — பெண்கள் அதிகம் படிக்காத, வீட்டை விட்டு வெளிக்கிடாத சூழல். பெண்களை பலவீனமானவர்களாகவே கருதிய காலம். அந்தநேரம் பெற்றோர்கள் மேலதிகமாக உள்ள சொத்துக்களை பெண்களுக்கு வழங்கினர். இத்தகைய ஒரு சம்பிரதாயம் நிலவிய வேளையில் ஐரோப்பியர்கள் இலங்கைக்குள் வந்தனர். அவர்கள் சுமூகமான முறையில் தமது தேவைகளை (அரசியல், பொருளாதார) பூர்த்தி செய்வதற்காக சம்பிரதாயமாக நடைமுறையில் இருந்த முறைகளை ''தேச வழமைச் சட்டம்'' என்ற வகையில் கொண்டு வந்து அதனைச் சட்டமாக்கினர் இது மேலும் சீதனம் கட்டாயமாக வழங்கப்படவேண்டும் என்பதை காலப் போக்கில் எடுத்துக் காட்டியது. இதுவே சீதனத்தின் வரலாறு.

பின்னர் சீதனமானது காலத்திற்கு ஏற்றவாறு மாறியது. ஆரம்பத்தில் அசையாப் பொருள்களாகவும், பின்னர் அசையாத, அசையும் பொருள்களாகவும் மாறியது. வீடு, காணி, நகை, பின்னர் காசு, அது முன்னேறி காசிலும் சீதனம், அன்பளிப்பு என இரண்டு வகை தோன்றியது. இதனை விட கார், பிரீஜ் என்று ஆடம்பரப்பொருள்கள் வரை சென்றது. இன்று - கனடாவிற்கு பெண்ணை அனுப்பினால் சரி, ஜேர்மனிக்கு அனுப்பினால் சரி (குறைந்தது ஐந்து லட்சம் தேவை) இது தான் சீதனம்.

இந்தச் சீதன முறையினால் நாட்டின் பொருளாதார, அரசியல், சமூகப் பிரச்சினைகள் ஏற்பட பெருமளவு வாய்ப்புள்ளது. பொருளாதார ரீதியாக பார்க்கும் போது,

பெரும்பாலான குடும்பங்கள் தமது பெண்பிள்ளைகளுக்கு சீதனம் சேர்க்கவேண்டும என்ற ஒரே நோக்கிலேயே தமது பொருளாதாரத்தேடல்களை மேற்கொள்கின்றனர். இங்கு அவர்களின் வருமானம் குடும்பத்தின் செலவு போக மிகுதியானது சீதனத்திற்கு என சேமிக்கப்படுகின்றது. இந்தச் சேமிப்பானது வேறொரு முதலீட்டுக்கு செலவிடப்படுவதில்லை. இங்கு முதல் தேங்கியிருக்கிறது. பின்னர் பெண்ணுக்கு வழங்கப்பட்டதும் பின் அவள் தனது மகளுக்கு சேமிக்கத் தொடங்குகின்றாள். அங்கும் முதல் முடக்கப்படுகிறது. இவ்வாறாக முதல் முடக்கப்பட்டுள்ள ஒரு நிலையில், பொருளாதாரமும் முடக்கப்பட்டே இருக்கிறது. இது ஒரு புறம், மறுபுறம்,

இன்று பெண்களே ஆண்களை விட எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருக்கின்றனர் என அண்மைக்கால புள்ளி விபரங்களில் இருந்து நாம் அறிகின்றோம். இந்த நிலையில், உயர்கல்வி அறிவிலும் பெண்களே முன்னிலையில் உள்ளனர். (பல்கலைக் கழக அனுமதியில் பெண்களே கூடுதலான அளவு இருக்கின்றனர்) ஆனால் தமிழீழத்தில், பெண்களை B.A, B.Sc.M.B - B.S என்ற தரத்திற்கு அதிகமாக படிப்பதற்கோ, அல்லது ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கோ

**உமா .மு**

சமூகம் அனுமதிப்பதில்லை சமமான அளவிற்கு அதிகமாக வாழும் பெண்கள் சமூகத்தின் தேவைகளை, பொருளாதார வளர்ச்சியில், பெருமளவு பங்கெடுக்கவேண்டும் என்பது நியதி. ஆனால் உயர்கல்வி வாய்ப்பினை பெண்களுக்கு அளிக்க சமூகம் விரும்பவில்லை. இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது இந்த சீதனம்தான். பெண்கள் உயர்கல்வி கற்றால் பெற்றோர்களுக்கு இரண்டு விதமான பிரச்சினைகள் ஏற்படுமாம். ஒன்று கல்விக்கு முதலிட வேண்டும். இரண்டாவது பெண்ணின் தராதரத்திற்கு ஏற்றவாறு வரனும் பார்க்க வேண்டும். (பெற்றோர்களே இந்த மனப்பாங்கை பெண்கள் மத்தியில் வளர்த்தனர்) குழந்தையாக இருக்கும் போதே ''உனக்கு அதிகம் படிப்பிக்கக்கூடாது. ஏனென்றால் எங்களுக்கு வசதியில்லை. படிப்பிக்கவும் ஏலாது. அதற்கேற்ற வரனும் பிடிக்கேலாது'' என்று சொல்லிச் சொல்லி பெண்ணின் மனதில் அதனை பதிய வைத்துள்ளனர். அதுவே பெண்கள் தமக்கு படித்த வரன் வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பதற்கும் காரணமாகும். இவ்வாறாக கல்வி குறித்து நடைமுறையில் இருந்த பழக்கங்களால் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் என்பவற்கு வழங்கப்படும் பங்களிப்பு குறைவானதாகவே அமைய பொருளாதார ரீதியாக நாம் பின்தள்ளப்படுகின்றோம். பெண்கள் பட்டதாரியாக வெளிவரும் போது பெற்றோர்கள் ''பெண் பட்டதாரியானால் செலவு. ஆண் பட்டதாரியானால் அது வரவு'' என்று குறிப்பிடுகின்றனர்.

இந்த வகையில் பொருளாதார ரீதியாக பாதிப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில்,

சமூக ரீதியாகவும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தேசிய விடுதலைப் போராட்டத்தின் பயனாக பெண்கள் மேலும் கூர்மையடைந்துள்ளனர் என்றுமே, எங்குமே காணாத ஒரு வகையில் போராட்டத்தில் அதுவும் ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பெருமளவு பங்காற்றவிருக்கின்றனர். இது ஒரு நிலை- மறுபுறம், போர்க்கால சூழலை சாதகமாக்கி சீரழியும் பெண்கள் மறுபுறம் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் 'சீதனத்துடன்' கொழும்பு சென்று அங்கிருந்து வெளிநாடு செல்வதற்காக காத்திருக்கின்றனர். அடுத்து, 'படித்த' வரன் வேண்டும் என்பதற்காக தாயகத்தில் இருந்த தமது விளைநிலங்களை, தமது வீட்டை விற்றோ அல்லது பாழடித்துவிட்டோ வெளிநாடு செல்பவர்கள். இவ்வாறாக சீதனம் என்பது சமூக ரீதியாக பெரிய மாற்றங்களை எழுப்பியுள்ளது.

சொத்துள்ளவர்கள் தமது பெண்களுக்கு சீதனம் வழங்குவார்கள். சொத்தில்லாதவர்கள் தமது பெண்களுக்கு எதனை வழங்குவது? இந்த வேறுபாடு காரணமாக சமூகத்தில் இரண்டு வகையான பிரிவுகள் ஏற்படுகின்றன. தாழ்வுச்சிக்கல் ஏற்படுகின்றது. தாழ்வுச் சிக்கல் ஒருவருக்கு ஏற்படுமாயின் அவர் எவ்வளவு தான் முயன்றாலும் தன்னிலையில் இருந்து எந்த வகையிலும் மாற முடியாது. தமது அந்தஸ்தை காப்பாற்றுவதற்காகவே பலர் தமது பெண்களுக்கு சீதனம் வழங்குகிறார்கள். 'அந்தஸ்து' என்ற பதம் தான் இத்தகையதொரு நிலைக்குக்காரணம் ஆகும்.

அடுத்து. 'படித்தவரன்' தேடும் பணக்கார பெற்றோரும், மாப்பிள்ளையின் கேள்வியைக் கூட்டி விடுகின்றனர். இதனால் மிகைக் கேள்வி ஏற்பட்டு தட்டுப்பாடு நிலை ஏற்பட்டு விடுகின்றது. இத்தகையதொரு சூழல் சமூகத்தில் ஏற்படுவதற்கும் சீதனம் என்பதே காரணமாக அமைகின்றது.

அரசியல் ரீதியாக பார்க்கும் போது, பொருளாதாரம் சீரடைந்தால் எமது போராட்டம் எந்தவித மழுங்கலுமின்றி முன்னேறி விடலாம், எதிரியின் பொருளாதார முற்றுகையில் இருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

பணம் சேர்ப்பதற்காக பணப்பயிர்களானபுகையிலை, மிளகாய் போன்ற பயிர்களே பயிரிடப்படுகின்றன. அத்துடன் சிறுகைத்தொழிலில் முதலிடப்படவேண்டிய முதல் சீதனத்திற்காக முடக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் நாம் பொருளாதார ரீதியான சவால்களை ஏற்க முடியாதவர்களாக இருக்கின்றோம். இத்தகைய நிலையை எதிரிகள் தமக்கு சாதகமாக்க முயல்கின்றனர். மேலும், வெளிநாட்டுக்கு செல்வோரின் எண்ணிக்கையும், மூளை சாலிகளின் வெளியேற்றம் என்பதும் இத்தகையதொரு பின்னணியிலேயே நடைபெறுகின்றது. இவையெல்லாம் அரசியல் ரீதியாக எமக்கு பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட வகையில், அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக பாதிப்புக்களை ஏற்படுத்தும் சீதன நடைமுறையை ஒழிப்பதற்கு சட்டம் கொண்டுவரப்படுதல் அவசியமானதாகும் ஆனால் நடைமுறையில் இதனை அமுல் நடத்தும் போது கீழ் வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்:

[2ஆம் பக்கம் பார்க்க)

வேண்டாம் எமக்கு இன்று தங்குநிலைப் பொருளாதாரம்
வேண்டும் இங்கு எமக்குச் சுயசார்புப் பொருளாதாரம்

தரம் நாடுவோர் விரும்பிச் சுவைக்கும்
மென்பானங்கள்
புத்தூக்கி REFRESHER
தயாரிப்புக்கள் (காற்றூட்டப்பட்டவை)

குடாநாட்டின் அனைத்து விற்பனவு நிலையங்களிலும்
அமோக ஆதரவுடன் விற்பனவில் முன்னணி வகிக்கும்

புத்தூக்கி மென்பானவகைகள்

தயாரிப்பாளரின் மற்றும் பல்வகைத் தயாரிப்புக்கள்,
சிறிலங்கா பொருள்களின் தரத்துக்கு நிகராக
எம் மண்ணின் உற்பத்திகள்.

வாங்குங்கள்! தரம் அறிந்திடுவீர்!

★ "சொக்கா" சொக்லட் - CHOCA
★ கூல்மன்ஸ் [ உடன் பழச்சாறு ] - COOLMANS
★ ஜவ் - பிக்ஸ் கம் - JAF - FIX GUM
[பிசின் பல்வேறு அளவுகளில்]
★ ஸ்ரோபெறி ஜாம் - பைன் அப்பிள் ஜாம்

புத்தூக்கி மென்பானங்கள் தவிர்ந்த இதர எமது தயாரிப்புக்களை விநியோகம் செய்ய விநியோகஸ்தர்கள் பின்வரும் பிரிவு ரீதியாகத் தேவைப்படுகின்றனர்.

பதிவுசெய்யவும்:
1. யாழ்ப்பாணம் / நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்
2. வலிகாமம் பகுதி [நல்லூர் - யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த பகுதி]
3. வடமராட்சிப் பகுதி
4. தென்மராட்சிப் பகுதி
5. கரைச்சிப் பிரிவுகள்
6. வன்னிப் பகுதி

எமது நிபந்தனைகளுக்கமைய வைப்புப் பணத்துடன் விநியோகஸ்தராகப் பதிவுசெய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

க. ஜெயபாலன்
பொது முகாமையாளர்
யாழ் பகுதி தெங்கு ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
370, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6652)
(விளம்பர அமைப்பு V. K. S.)

மாநகர யாழ்ப்பாணம்



# கண்ணகை வழக்குரை

## - ஒரு கண்ணோட்டம்

முல்லைத்தீவில் முதன்மையாகப் பெயர் பெற்று விளங்குவது கண்ணகி கூத்து. இது செல்லையா மற்றாஸ் மயில் நெறியாள்கையில் கண்ணகை வழக்குரை என்ற பெயரில் சமீபத்தில் திருமறைக் கலா மன்றம் எடுத்த நாட்டுக் கூத்து விழாவில் மேடைப்படுத்தப்பட்டது.

விவசாய, பொருளாதார அமைப்புடன் சமரசத்தை பேற்கொண்டுள்ள கண்ணகி கூத்து, களத்து மேட்டில் அல்லது பெருபபாலும் வட்டக்களரியில் மிகத் தீவிரமான சமய அர்ப்பணிப்புடன் முல்லைத்தீவில் ஆடப்படுகிறது. நோய், நொடி அல்லது ஊரில் வளம் குன்றுமாயின், அவை வற்றாப்பளை கண்ணகி அம்மனின் சீற்றத்தால் உண்டாகியது என்று எண்ணி கண்ணகி கூத்தாடுவது முந்தையர் வழக்கமாயிருந்திருக்க வேண்டும். இரவோடு இரவாக ஆடப்படும் இக் கூத்தைக் குத்துமதிப்பாக ஒன்றரை மணித்தியாலத்துக்குச் சுருக்கி நவீன அரங்கிற்கு (ப்ரேசீனிய அரங்கு) ஏற்றபடி எளிமைப் படுத்தியுள்ளார். மற்றாஸ் மயில் கண்ணகி கூத்தை, வட்டக்களரியைத் தவிர்த்து யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், பேராதனைப் பல்கலைக் கழக அரங்கிலும், வானொலியிலும் நிகழ்த்தியவர் அண்ணாவி சுப்பிரமணியம் அவரை அடியொற்றித் தள்ளுவன தள்ளியும் கொள்வன கொண்டும் நம்பிக்கையோடு கண்ணகை வழக்குரை திருமறைக் கலா மன்ற அரங்கில் ஆடப்பட்டது. ஒட்டு மொத்தமாகப் பார்ததால், நெறியாள்கையில் தனித் தன்மை கொண்ட கண்ணகை வழக்குரையைத்தான் நவீன அரங்கில் பார்க்க முடிகிறது.

வடமோடிக் கூத்துக்குரிய சில கூறுகளும் முல்லைத்தீவுப் பாங்கில் அமைந்த சில அம்சங்களும் கண்ணகை வழக்குரையில் காணப்படுகின்றன. இக் கண்ணோட்டத்தில் கோவலன், கோப்பெருந் தேவி, மாதவி, கண்ணகி மற்றும் சேவகர்களாக வேடம் ஏற்றவர்களுக்கு கூத்தாடும் திறமையைப் பயிலுவித்தமை நெறியாளரின்பணிச் சுவைகளில் ஒன்றாக உள்ளது. ஆனால் இவர்களுக்குக் கூத்துப் பட்டறை அவசியம் என்பதைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

கோவலனாக முகமெழுதியவர் தனது திறமையை அடையாளம் காட்டிப் பாடி ஆடுகிறார். இவர் அடிபெயர்ந்து அசையும்போது இடையிடையே மெய்ப்பாடுகளில் நாடகத் தன்மை தலைதூக்குகிறது. இதே பாணியில், இந்தக் கூத்து பல தடவைகள் ஆடப்பட்டால் நாட்டுக் கூத்துக்குப் பதிலாக நாடகத் தன்மை (Theatriealism) உருவாகக் கூடும். நாட்டுக் கூத்திலிருந்து அந்நியப்படும் இந்தத் தன்மையைத் தவிர்ப்பது பயன் பொருததமானது.

கண்ணகியாகவும், மாதவியாகவும், கோப்பெருந்தேவியாகவும் பாகம் ஏற்றவர்களின் ஆட்ட வடிவத்தில் நாட்டுக்கூத்துக்குரிய அசைவு இல்லாமல் சற்று மாறுபட்ட தன்மை இருப்பதைப் பார்க்கலாம். மாதவியாக ஆடியவர் தன்னைப் பூரணமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். நுணுக்கமாகக் கவனித்தால் கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி ஆகியோரின் ஆட்டங்களில் ஒய்யாரத்துக்குப் பதில் லாஷ்யமே காணப்படுகின்றது. முல்லைத்தீவுப்பாங்கில் முகிழ்ந்து வருகின்ற ஒய்யாரமும், பரதத்து லாஷ்யமும் ஒன்றல்ல. இரண்டும் அடிப்படையில் இருவேறுபட்ட ஆட்டவடிவங்களாகும். ஆயினும் பரதநாட்டியப் பண்பாட்டுக் கோலத்துக்குப் பழக்கப்பட்டுப் போன நுகர்வோர் தளம் ஈடுபாட்டுடன் இந்த ஆட்டங்களை வரவேற்றது என்ற உண்மையையும் இங்கு குறிப்பிட வேண்டும். மற்றும்படி பாண்டியன் அவையில் கண்ணகி நீதி கேட்டு ஆடும்போது, சுற்றி ஆடுவதை மாற்றி அடுத்த வடிவத்துக்குப் போக முடியாததைப் பார்க்கிறோம்.



பாண்டி ராஜனாக
மற்றாஸ் மயில்

வஞ்சிப்பத்தனாகவும், பாண்டி ராஜாவாகவும் ஆடியவர்கள் இக்கூத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள். நன்றாகப் பாடி ஆடியுள்ளார்கள் கூத்தின் உயிர் வஞ்சிப்பத்தனின் ஆட்டம். அந்த வேடம் ஏற்றவர் குதித்து மிதித்து பொடியடிவைத்து (முன்னேறி நடப்பது) ஆடிச்செல்வது, ஆட்டம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. பாண்டி ராஜனாக ஆடியவரும் மரபிற்கேற்ப வாளைக் கையில் ஏந்தியபடி கரப்புடுப்புடன் ஆட்ட நுணுக்கங்களுக்கு அழுத்தம் கொடுத்து ஆடியவிதம் பார்வையாளர்கள் ரசித்தார்கள். ஆனால், அடுத்துப் பாண்டி ராஜன் வருகை தரும்போது கரப்பு உடுப்பைக் களைநது விட்டு மிகுதிக்கூத்து முழுவதும் வழமையான அரச உடுப்போடு ஆடுவது பார்வையாளரின்ரசனையைக் குறைத்து விடுகின்றது.

பக்கப்பாட்டுக்காரரின் இயலாமையை ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும். தாளக் கட்டுக்கு ஈடுகட்ட வஞ்சிப்பந்தனும்பாண்டிராஜாவும் ஆடும் போது பக்கப்பாட்டு அமுக்கி விடுகிறது. ஆட்டத்தின் கடுமையால் வஞ்சிபபந்தனுக்கு மூச்சு வாங்கியது. பக்கப்பாட்டுக்காரர் எடுத்துக் கொடுக்கவில்லை. பக்கப்பாட்டு கை கொடுத்திருந்தால் கூத்தின் தரம் இன்னும்உயர்ந்திருக்கும்

ஆடிப்பாடுவது மாத்திரம் கூத்தாகாது. கூத்தை நவீன மேடைக்குத் தயாரித்த மற்றாஸ் மயில் ஒளி, ஒலி, ஒப்பனை ஆகிய தொழில்நுணுக்கங்களில் ஏனோ கவனம் செலுத்தவில்லை கண்ணகை வழக்குரையில் தொழில்நுணுக்கங்கள் ஒத்திசைவு பெறாதது ஏமாற்றத்தைத் தருகிறது. ஆரம்பத்தில் மைக் ஒத்துழைக்க வில்லை. ஒப்பனை செய்தவர் கண்ணகிக்கு நிலத்தைக் கூட்டச் சேலை கட்டிப் பார்வையாளரின் ரசனையை அலட்சியப்படுத்தியுள்ளார். கண்ணகி ஆடும் போது ஜல்லிக் கட்டு மாட்டைத் துரத்திப் பிடிக்க ஓடுவதுபோல்சேலையைப்பிடித்துக்கொண்டு ஆடுவது ஆட்டத்தைக் குழப்பி விடுகிறது. தமிழ் சூழலுக்குச் சம்பந்தமில்லாத திரைகளைத் தவிர்த்திருக்கலாம். ஜோடனைகளும் திரைகளும் காட்சிக்கு வேண்டியபின்புலத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இல்லையாயின் அவற்றை மேடையில் பயன் படுத்த வேண்டிய அவசியமில்லை.

தயாரித்தல், ஆட்டப் பயிற்சி அளித்தல், நடிதல் என்பவற்றோடு நெறியாள்கையும் செய்து ஒரு கூத்தை மேடைப்படுத்தி விட்டேன் என்று நெறியாளர் சொல்லலாம். ஆனால் அவைக் காற்றுவது என்பது ஆரம்பத்தில் வாழ்க்கையோடு இசைந்த ஓர் அம்சமாக இருந்தது முழுச் சமூகமுமே ஒத்திசைவாக இயங்கியது இன்று கூத்தை ப்ரேசீனிய மேடைக்குத் தயாரிக்கும் போது வேலைப்பிரிவினையை அனுகாவிட்டால் குறைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

**மதன்**

# “நன்கொடை கல்வித் திணைக்களப் பிரமாணங்களை மீறும் செயல்”

பாடசாலை அனுமதியின் போது நன்கொடை பெறுவது நியாயம் என்ற வாதத்தில் உள்ள சில விஷயங்கள் நமது கவனத்துக்குரியவை.

பிள்ளைகளைப் பாடசாலைகளில் அனுமதிக்கும் போது நன்கொடையை வலியுறுத்தி முதன்மைப்படுத்துவதும் அதனை ஒரு முன் நிபந்தனையாக வைப்பதும் நகர்சார்ந்த முன்னணிப் பாடசாலைகளிடையே வேரூன்றி உள்ளது. சிறு பாடசாலைகளுக்கும் சமீபத்தில் இந் நோய் பரவியுள்ளது. இதனால் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பெற்றோர்கள் ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. கையில் உள்ளதை விற்று அல்லது கடன்வாங்கிப்பெற்றோர் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மேலும் இது நுகர்ச்சி சார்ந்த மனப்பான்மையையும் உருவாக்கி வருகிறது. அதாவது வசதி படைத்தவர்கள் மத்தியில் 'நான் கொடுக்கிறேன் நீ வாங்கிக் கொள்' என்கிற நிலை. இதற்கேற்றதாய் ஏழைகளும் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டியுள்ளது.

அனைவருக்கும் கல்வி என்பது ஓர் ஜனநாயகக் கல்விக் கோட்பாடாகும். இதனைக் கருத்தில் கொண்டே இலங்கை உட்படப் பல நாடுகளில் இலவசக் கல்வி முறை அமுல்படுத்தப் பட்டுள்ளது. பணத்தை அளவு கோலாகக் கொண்டு பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பது எல்லோருக்கும் கல்வி என்ற அடிப்படை ஜனநாயக உரிமையை மறுதலிக்கும் செயலாகும்.

பாடசாலை வரவு-செலவுத் திட்டமானது மாணவர்களிடமிருந்து சேர்க்கப்படும் வசதிகள்-சேவைகள் கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே தயாரிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது. பாடசாலை அனுமதிக்காகப் பெறப்படும் நன்கொடைப் பணத்தையும் வரவு-செலவுத் திட்டத்துடன் இணைத்துப் பாடசாலைத் தேவைகளுக்குச் செலவு செய்வது கல்வி நிர்வாகத்துக்குப் பொருத்தமற்றது இது பாடசாலை அபிவிருத்திச் சபையையும், நலன் விரும்பிகளையும், பழைய மாணவர்களையும்தவறானவழியில் இட்டுச் செல்லும் செயலாகும்.

> எல்லோருக்கும் கல்வி என்பது ஓர் ஜனநாயகக் கல்விக் கோட்பாடாகும். பணத்தை அளவு கோலாகக் கொண்டு பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பது எல்லோருக்கும் கல்வி என்ற அடிப்படை ஜனநாயக உரிமையை மறுப்பதாகும்.

முதன்மைப் பாடசாலைகள் சில பாடசாலையோடு இணைந்த ஏனைய செயற்பாடுகளுக்கு பெரும் செலவு ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. அதனால் நன்கொடை என்ற பெயரில் பெற்றோரிடமிருந்து பணம் வசூலிப்பது தவிர்க்க முடியாதது என்று நியாயப் படுத்தப்படுகிறது.

இது ஒரு ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய பொதுவான நியாயமன்று. ஆனால் அநேக முன்னணிப் பாடசாலைகளில் இது ஒரு நியதியாகவும் உள்ளது. இந்தப் பொருளாதார நிர்ப்பந்த காலத்தில் சிறு எண்ணிக்கையான மாணவரின் நன்மை கருதியும், மற்றவர்களின் காட்சிக்காகவும் பெறப்படும் நிதியில் பெரும்பகுதியைச் செலவு செய்வது, பயன் பொருத்தமற்றது. நிதி ஒதுக்கீடு பாடசாலையில் வசதிக் கட்டணம் செலுத்தும் அனைத்து மாணவர்களுக்கும் சுவரக் கூடியவகையில் அமைய வேண்டும். மாறாக ஒரு குறுகிய வட்டமான ஐம்பது மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் செலவு செய்வது கல்வியின் நோக்கத்துக்கு மாறானது. பணத்தின் பெரும் பகுதியை நூல் நிலையத்துக்கு நூல் கொள்வனவு செய்தல், ஆய்வுகூடத் தேவைக்கான பொருள்களை வேண்டுதல் போன்ற தேவைகளுக்குச் செலவு செய்வது செயற்பயன்பாடு உள்ளதாக அமையும்.

முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் ஏழை மாணவரின் நலன்கருதி பாடசாலை அனுமதியின் போது நன்கொடை எதையும் வசூலிக்கக் கூடாது என்று பணிப்புரை வழங்கியிருந்தார். அந்தப் பணிப்புரை இன்றுவரை ரத்துச் செய்யப்படவில்லை. அந்தப் பணிப்புரை நடைமுறையில் இருக்கும் போது அதை மீறிப் பாடசாலைகள் நன்கொடை வசூலிப்பது கல்வித் திணைக்களததின் பிரமாணங்களை மீறும் செயலாகும் பாடசாலைகளில் பகிரங்கமாகஇடம்பெறும் இந்தப் 'பணச்சடங்கு' குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண் மூடி மௌனியாக இருப்பது, அவர்களும் இந்தச் செயலுக்குத் துணை போகிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

நன்கொடை போதாதோ என்னவோ, மாணவர்களுக்கு என்று இலவசமாக வழங்கப்படும் உணவு முத்திரைகளையும் சில அதிபர்கள் மீளப் பெற்றுப் பாடசாலைகளுக்கு நன்கொடையாக்கிக் கொள்கிறார்கள். அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தப் பணமும் செலவு செய்யப்படுகிறது. பெரும்படியாக எல்லா மாணவர்களிடமும் உணவு முத்திரைகளைச் சில அதிபர்கள் மீளப் பெறுவதால், ஏழை மாணவர்களே மீண்டும் பாதிக்கப்படுகிறார்கள். இதனை எந்த 'நன்கொடை'க்குள் சேர்ப்பது என்பது புதிராகவே உள்ளது.

நன்கொடை வாங்குவது என்பது நகரப்பாடசாலைகளிலும், புறநகர்ப் பாடசாலைகளிலுமே அதிகமாகக் காணப்படுகிறது. இது ஒரு நகர் மயப் போக்கின் தன்மையாகும். இது படிப்படியாகக் கிராமங்களிலும் பரவி, கிராமங்களிலும் ஏழை மாணவர்களுக்குக் கதவடைக்கப்படுகிறது. இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

பணத்தைக் கொண்டு பாடசாலை அனுமதியைத் தீர்மானிப்பதென்றால் கல்வித்தகைமை என்ற அளவு கோல், எழுத்துப் பரீட்சை, புலமைப் பரிசில் பரீட்சை என்ற அளவீட்டுக்கு அவசியமில்லை. கல்வியில் பணம் ஆட்சிசெய்வதென்றால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகள் நிலை என்ன?

-ஒரு பெற்றோர்-

### சிந்தனைக்கு

இயற்கை நமக்கு ஒதுக்கியுள்ள ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலாக, நலனையோ இன்பத்தையோ, நாம் பறிப்பது, உரியகாலத்திற்கு முன்பே பணத்தைச் செலவுசெய்து விட்டுஉரிய நாளில் பணம் இல்லாமல் வருந்துவதற்குச்சமம்.

— ஸேம்யல் ஜான்ஸன்

# நீங்காத நினைவலைகள்

8 ஆம் ஆண்டு நினைவலைகள்




**லெப். வாசன் (புவி)**

[மாணிக்கவாசகர் குவீந்திரராஜா]

வீரஜனனம்: 12 - 07 - 1963 வீரச்சாவு : 21 - 05 - 1985

6 ஆம் மாத நினைவலைகள்



**மேஜர் தமிழரசன்**

[டொச்சன்]

[ கந்தசாமி ஜெயக்குமார் ]

முன்னாள் புன்னாலைக்கட்டுவன்
பிரதேசப் பொறுப்பாளரும்
வலிகாமம் விசேட தளபதியும்

வீரஜனனம் : 21 - 06 - 1966 வீரச்சாவு : 24 - 11 - 1992

அன்புச் சகோதரர்களே!

தாயகமாம் தமிழீ.ம் காண வேண்டித்
தன்னுயிரை அர்ப்பணித்த தியாகச் செம்மல்
மானமே உயிராக மதித்த வீரர்
மண்மீட்புப் போர்புகுந்த வேங்கை வீரர்
குருதியில் இந்தமண் சிவந்திட நெஞ்சினில்
குண்டினை ஏற்றீர்கள்
இருவிழி சிவந்திட உறுதிகள் எடுக்கிறோம்
இனிவரும் தமிழீழம்.

**குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.**

(சி-6656)




1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் (ஜாம் அல்லது நெல்லி ரசம்) கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டைப் பெறறுக் கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1ஆம் பரிசு – சுவர்க் கடிகாரம்
2ஆம் பரிசு – எவர்சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3ஆம் பரிசு – மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்.

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.
1) ரேஸ்லைன் இன்டஸ்றீஸ்-14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம.
2) அறிவகம் — சாவகச்சேரி.
3) சுபாஸ் பேக்ஹவுஸ் — நெல்லியடி.
4) சுந்தரம் அன் சன் — சுன்னாகம்.
5) சித்திவிநாயகர் நூல்நிலையம் — ஏழாலை மேற்கு, சுன்னாகம்,
6) சபாரிஸ் — சுண்டிக்குளி
7) நீதினி Q — சுன்னாகம்
8) செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, — நவாலி வடக்கு, மானிப்பாய்
9) ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி — வட்டுக்கோட்டை
10) இ. இராசதுரை, பத்திரிகை விற்பனை நிலையம் — இருபாலைச் சந்தி

**TASTELINE INDUSTRIES (PVT) LTD**
14, SEENIAR LANE, JAFFNA.

(சி/6617)

# வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப் பட்டப்பாட நெறிகளான

★ **கலைமாணி** ★ **விஞ்ஞானமாணி** ★ **வணிகமாணி**

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம்.

பேராதனை பல்கலைக்கழக (வெளிவாரி)
விரிவுரைகள் : B. A: 1994 ஏப்ரல்
**ஆரம்பம் 22 - 05 - 1993**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக (வெளிவாரி)
விரிவுரைகள் : கல்வியாண்டு 1993/94
புதிய பிரிவுகள் : **ஆரம்பம் : 23-5-1993**

**மீட்டல் விரிவுரைகள்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக [வெளிவாரி]
முதல்தேர்வு: 1993 யூலை
மெய்யியல் - வே. யுகபாலசிங்கம்
அரசஅறிவியல் - செல்வரட்ணம்
**ஆரம்பம் : 23-05-1993**

பேராதனை பல்கலைக்கழக
**மீட்டல் விரிவுரைகள்**
1993 [ஆகஸ்ட்]
மெய்யியல் - வே. யுகபாலசிங்கம்
அரசியல் - செல்வரட்ணம்
**ஆரம்பம் : 23 - 05 - 1993**

**விபரங்களுக்கு**

**உதவிப்பதிவாளர்**

# பட்டப் படிப்புகள் கல்லூரி

**148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-6649)

# விகிதாசாரத் தேர்தலும் ஐ.தே.கவின் தோல்வியும்



இரண்டாவது மாகாண சபை தேர்தல் முடிவுகள், சிறிலங்கா அரசியலில்ஒரு ஸ்தீரணமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. சுமார் பதினைந்து வருடகாலம் நிலவிய ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்கு இத்தேர்தல் முடிவுகள் ஒரு சவாலாக அமைந்துள்ளது என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

சிறிலங்காவின் அரசியல் அமைப்பும், அதன் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும், அரசியல் ஸ்தீரணத் தன்மைக்கென உருவாக்கப்பட்டது என்பதே இவ் அரசியலமைப்பின் தந்தையான முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் நிலைப்பாடாகும். இன்று கூட சிலவேளை, மாகாண சபைத் தேர்தலினால் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்தீரணமற்ற தன்மையில் இருந்து நாட்டை மீட்டெடுத்துச் செல்ல, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இருப்பதே வாய்ப்பு என ஜே. ஆர். ஜெயவர்தனா குறிப்பிடலாம். ஆனால், அவை சிறிலங்கா ஜனாதிபதியை ஓர் எதேச்சதிகாரத்திற்கு இட்டுச் செல்லக் கூடியதே ஒழிய ஒரு போதும் ஒரு 'ஜனநாயக ரீதியான' வழிமுறைக்குக் கொண்டுவர வாய்ப்பு ஏற்படப் போவதில்லை.

கடந்த 17ஆம் திகதி நடந்து முடிந்த தேர்தலானது, மூன்று மாகாணங்களை ஐ.தே. கட்சி எதிர்க்கட்சிகளிடம் தாரை வார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில், குறிப்பாக மேல்,தென் மற்றும் வடமேல் மாகாணங்களை ஐ.தே.க இழந்திருப்பது என்பது அக்கட்சியைப்பொறுத்துப் பெரும் பின்னடைவு என்பதும், ஐ தே.கவின் ஆட்சிக்கு பெரும் சவாலாக அமையக்கூடியதுமாகும். ஏனெனில், இம்மாகாணங்கள் மூன்றும் சிங்களவரின் சனத்தொகையில், பெரும் பங்கு வகிப்பதோடு, சிறிலங்காவில் சனத்தொகை அடர்த்திமிக்க பகுதிகளும் ஆகும்.

மேலும் ஐ. தே கட்சி உருவாக்கிய திறந்த பொருளாதாரக் கொள்கை தீவிரமாக அமுல்படுத்தப்படுவதும், பெரும் வெளிநாட்டு மூலதனமும், பிரதான கைத்தொழில், மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறும் வலயமாகும். இந்த நிலையில், நாட்டின் முக்கியமான பகுதியில், முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க முடியாமல், அதே வேளை,எதிரான ஆட்சியிடம் இருந்துவரும் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஆளும் ஐ தே. கவிற்கு ஏற்பட்டுள்ளது.

## விகிதாசார தேர்தல்

சிறிலங்காவில் அரசியல் ஸ்தீரணத் தன்மையை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை எவ்வாறு பேணும் எனஎதிர்பார்க்கப்பட்டதோ,அதே போன்றே ஆட்சியில் தொடர்ந்தும் ஐ.தே. கட்சியை வைத்திருப்பதற்கெனவேகொண்டுவரப்பட்டது தான் விகிதாசாரப் பிரதிநிதித்துவமாகும். ஆனால் இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது தற்பொழுது ஐ. தே. கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

சில வேளை ஜனாதிபதி தேர்தலை மட்டுமே கவனத்திற் கொண்டு இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை திரு. ஜே ஆர். ஜெயவர்தனா உருவாக்கியிருப்பின் அது ஒரு வேளை சரியாக இருக்கலாம். ஆனால் பாராளுமன்ற மாகாணசபை தேர்தல்களில் அதிலும் குறிப்பாக மும்முனைப் போட்டி கடுமையாக இடம் பெறும் நிலையில் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா எண்ணியதற்கு மாறானவிளைவுகளை கொடுப்பதாகவே உள்ளதை அனுபவ ரீதியான தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

## ஐ.தே.கவும் மாகாணசபை தேர்தலும்

இம்முறை மாகாணசபைத் தேர்தலின் மூலம், ஐ. தே. க மூன்று மாகாணங்களை இழந்து விட்டதென்றால் அதற்குப்பிரதான காரணம் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் ஏற்பட்ட மும்முனைப் போட்டியே ஒழிய, எதிர்க்கட்சிகள் மக்கள் மத்தியில் பெற்றுள்ள பேராதரவு என்றுகூறிவிட முடியாது ஏனெனில், 1988ஆம்ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அநேக மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வாக்கு இழப்பை விட ஐ தே. கட்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறைவு என்றே கூறலாம். சில இடங்களில் ஐ தே.கவிற்கான வாக்குகள் அதிகரித்திருப்பதையும் அவதானிக்கலாம். அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்கலாம் என எதிர் பார்க்கப்படும். தென்மாகாணத்தில் 1988ஆம் ஆண்டுஐ.தே க பெற்ற வாக்கு வீதத்தை விட இம்முறை சுமார் ஐந்து வீத வாக்குகளை அதிகமாகப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒட்டுமொத்தமாக, ஐ தே. கட்சியானது,தென்மாகாணம், வடமேல்மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் ஆகியவற்றில், கடந்த ஜனாதிபதித் தேர்தலைவிட அதிகரித்த வாக்கு வீதத்தையே பெற்றுள்ளது. ஆனால், மூன்றாம் அணியின் தேர்தல் பிரவேசமானது, ஒரு சிறுதொகுதி வாக்குக்களை ஐ தே. காவில் இருந்து பிரித்துச் சென்றது. இது குறிப்பாக மேல் மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் தாக்கத்தை விளைவித்தது. இவ் இரு மாகாணத்திலும் மூன்றாம் அணி சுமார் 8வீதமான வாக்குக்களைத் துண்டாடியதெனலாம்.

## சுதந்திரக் கட்சியும் 2-வது மாகாணசபைத் தேர்தலும்

விகிதாசார ரீதியான தேர்தலில் ஐ. தே கட்சி நஷ்டமடைந்ததென்றால், லாபமடைந்த கட்சி சுதந்திரக் கட்சி ஆகும். 1988ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில், சகல மாகாணங்களிலும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ள சுதந்திரக்கட்சி ஒரு மாகாணத்தில் பெரும்பான்மையும், இரு மாகாணத்தில் மூன்றாவது அணியுடன் சேர்வதன்மூலம் ஆட்சி அமைக்கும் வாய்ப்பினை பெற்றுள்ளது. இது சுதந்திரக் கட்சிக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவமும், மூன்றாம் அணியின் உருவாக்கத்தினாலும் கிடைக்கப் பெற்ற அதிர்ஷ்டம் ஆகும்.

எடுத்துக்காட்டாக. மேல் மாகாணத்தில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கிடைக்கப் பெற்ற வாக்கு வீதத்தை விட குறைவான வாக்குவீதத்தை சு.கட்சிபெற்றபோதும், மூன்றாம் அணி, சு. கட்சியில் இருந்து பிரித்த வாக்கு வீதத்தைவிட ஐ தே. கட்சியில் இருந்து பிரித்த வாக்கு வீதம் அதிகமாகையால் இது சாத்தியமாயிற்று. இதே போன்று. தென் மாகாணத்தில், சு .கட்சி கடந்த தேர்தலில் (ஜனாதிபதி) பெற்றதைவிட சுமார் 15 வீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்றது. சு, கட்சியின் இத் தோல்விக்கு கட்சியினுள் காணப்படும். முரண்பாடுகளும், தேர்தல் காலத்தில் அவர்கள் பிரசாரக் கூட்டங்களில் வெளிப்படையாக மோதிக் கொண்டமையுமேகாரணமெனலாம். இருப்பினும், மூன்றாம் அணியின் உருவாக்கம் ஆட்சியை அமைக்கும் வாய்ப்பை சுதந்திரக்கட்சி பெற வாய்ப்பைக் கொடுத்துள்ளதெனலாம்.

## ஐ. ஐ. தே. முவும் முதலாவது தேர்தலும்

மூன்றாவது அணியாக, முதல்முறையாக தேர்தலில் பங்குபற்றிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, எதிர்பார்த்த தேர்தல் வெற்றியைப் பெற முடியாவிட்டாலும், விகிதாசாரத் தேர்தல் முறை காரணமாக மூன்றாம் சக்தியாக உருவாகியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இதனால் மூன்று மாகாணங்களில் யார் ஆட்சி அமைப்பது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் மாறியுள்ளது. ஆனால், எதிர் பார்க்கப்பட்டது போல் இக்கட்சியானது ஐ.தே.கட்சியில் இருந்து வாக்குகளைப் பிரித்ததாகிலும், இக்கட்சிபெற்ற வாக்குகளில் அநேகமானவை சுதந்திரக் கட்சியினுடையவையே ஆகும். மேல்மாகாணத்தைத் தவிர, ஏனைய மாகாணங்கள் யாவற்றிலும் ஐ.தே கட்சியைத்தவிர சுதந்திரக்கட்சியின் கடந்த கால வாக்குகளையே இக்கட்சி பெற்றுள்ளது. இந்நிலையானது சுதந்திரக்கட்சியைவிட ஐ தே.கட்சியில் சிறிலங்கா வாக்காளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாகவே எண்ண வைக்கிறது. சில மாகாணங்களில் குறிப்பாக தென் மாகாணத்திலும், வடமத்திய மாகாணத்திலும் சுதந்திரக்கட்சியின் வாக்குகள்ஜ ஐ தே.முன்னணிக்கும், ஐ. தே. கா விற்கும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவே கணிப்பீடுகள் காட்டுகின்றன.

## சிங்களவரும் மாகாணசபை தேர்தலும்

இத்தேர்தலில் ஏனைய இனங்களை விட சிங்களவர்கள் ஓரளவிற்கு ஐ.தே.கட்சி மீது தமது வெறுப்பை வெளிக்காட்டியுள்ளனர் என்றே கூறலாம். அதிலும் குறிப்பாக மேல்மாகாணத்திலும், வடமேல்மாகாணத்திலும் உள்ள மத்திய தர சிங்களவர் மத்தியில் ஏற்பட்ட வெறுப்பை இத்தேர்தல் வாக்களிப்பு புலப்படுத்தியுள்ளது. இதனையே மேல் மாகாணத்திலும் வட மேல் மாகாணத்திலும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிபெற்ற குறிப்பிடத்தக்க வெற்றி எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

ஆனால் இத்தேர்தல் முடிவுகள் மேலும் ஒன்றை வெளிக்காட்டுவதாகவும் உள்ளது. கடந்த காலத்தில் கிராமப்புறங்களில் ஐ தே. கட்சிபொதுவாகச் சந்திக்கும் பின்னடைவுகளை இம்முறை சந்திக்கவில்லை. மாறாக தன்னைக கிராமப்புறங்களில் பலப்படுத்திக் கொண்டுள்ளது. இதனை வடமத்திய மாகாணத்திலும், தென் மாகாணத்திலும் ஐ. தே. கட்சிபெற்ற குறிப்பிடக் கூடிய வெற்றிகள் எடுத்துக் காட்டுகின்றன. மாறாக சுதந்திரக்கட்சி கிராமப் புறங்களில் தனது பிடியை இழந்துள்ளது என்றே கூறலாம். சுருக்கமாக கூறின் ஆளும் ஐ. தே. கட்சி மீது மத்தியதர வர்க்கத்தினர் வெறுப்பை ஓரளவு காட்டியுள்ள வேளையில் கிராமப் புறத்தில் அதன் செல்வாக்கு வலுப்பட்டுள்ளது எனலாம்.

## சிறுபான்மையினரும் தேர்தலும்

இத்தேர்தலைப் பொறுத்து கடந்த தேர்தல்கள் யாவற்றையும் விட சிறிலங்காவின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக மலையகத் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் இருந்துள்ளனர். அதிலும் குறிப்பாக ஐக்கியதேசியக் கட்சிஆட்சியைக் கைப்பற்றியுள்ள மத்திய, சப்பிரகமுவா, ஊவா மாகாணங்களில் இவர்களின் பங்கு கணிசமானதாகும். குறிப்பாக 1988ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐ.தே.கட்சிபெற்ற சிறுபான்மை இனங்களின் வாக்குகள் முழுவதையும் அக்கட்சி தொடர்ந்து பெற்றுள்ளது என்றே கூறலாம்.

இதன் மூலமே, சிங்களவர் அதி பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களில் தோல்விகளைச் சந்தித்த ஐ. தே. க சிறுபான்மையினர் வாக்குகளை குறிப்பிடக்கூடிய அளவில் கொண்ட மாகாணங்களில் வெற்றி பெற்றமையாகும். எடுத்துக்காட்டாக, மலையக தமிழ் மக்கள் அதிகம் வாழும் மத்திய மாகாணங்களிலுள்ள மூன்று மாவட்டங்களிலும் ஐ. தே. க. பெரும்பான்மை பெற்றமையைக் குறிப்பிடலாம். இத்தேர்தலில் மலையக தமிழரின் வாக்குகள் ஐ தே. கட்சிக்கே பெருமளவில் வீழ்ந்தது என்பதற்கு கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது நுவரெலியா, மஸ்கெலியா தொகுதியில் ஐ.

## ஜெயராஜ்

தே. க சார்பில் போட்டியிட்டு மிக உயர்ந்த வீதமான விருப்பத்திற்குரிய வாக்குகளைப் பெற்ற காமினி திசாநாயக்காவின் கட்சியான ஜ. ஐ. தே. முன்னணி மிகக் குறைந்தளவு வாக்குகள் பெற்றமையே இதனைப் புலப்படுத்தப் போதுமானதாகும்.

இதனைப் போன்றே முஸ்லிம்களும் ஐ. தே. கவையே ஆதரித்துள்ளனர். உதாரணமாக வடமேல் மாகாணத்தில் ஐ தே. க. ஆட்சி அமைக்க முடியாவிட்டாலும், அம்மாகாணத்தில் முஸ்லிம்களைக் கணிசமான அளவில் கொண்ட புத்தளம் மாவட்டத்தில் ஐ. தே. கவே அதிகமான ஆசனங்களைப் பெற்றுள்ளமை தெளிவுபடுத்தப் போதுமானது. இதே போன்று மேல்மாகாணத்திலும், தமிழரினதும், முஸ்லிம்களினதும் வாக்குகள் ஐ தே. கட்சியின் வீழ்ச்சியை குறிப்பிடத்தக்க அளவில் கட்டுப்படுத்தியுள்ளது எனலாம்.

சுருக்கமாகக் கூறின் இத்தேர்தல் முடிவுகளினால் ஐ. தே. கவை விட சுதந்திரக் கட்சி நன்மை அடைந்துள்ளது என்றே கூறலாம். இதேவேளை ஸ்திரமான ஆட்சிக்கென உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு ஒரு நெருக்கடியை எதிர் நோக்குகின்ற அதே வேளை, ஐ. தே. க. நன்மை கருதி உருவாக்கப்பட்ட விகிதாசாரப்பிரதிநிதித்துவ தேர்தல்முறை அக்கட்சிக்கே பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது.

| மாகாணங்கள் வாக்காளர் வீதம் | ஜனாதிபதித் தேர்தல் 1988 ஐ.தே.க. | மாகாணசபைத் தேர்தல் 1993 ஐ.தே.க. | ஜனாதிபதித் தேர்தல் 1988 சுதந்திரக் கட்சி | மாகாணசபைத் தேர்தல் 1993 சுதந்திரக் கட்சி | மாகாணசபைத் தேர்தல் 1993 ஜ. ஐ. தே. முன்னணி | மாகாணசபைத் தேர்தல் 1983 சுதந்திரக் கட்சி + ஜ. ஐ. தே. மு |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 48. 2 | 40. 5 | 47. 9 | 41. 3 | 16. 1 | 57. 4 |
| மத்திய | 57. 1 | 53. 1 | 41. 3 | 26. 6 | 16. 1 | 42. 7 |
| தென் | 45. 1 | 49. 5 | 52. 4 | 37. 8 | 12. 5 | 50. 3 |
| வடமேல் | 52. 9 | 45. 5 | 45. 2 | 36. 0 | 16. 7 | 52. 7 |
| வடமத்திய | 46. 3 | 52. 0 | 51. 8 | 34. 6 | 10. 2 | 44. 8 |
| ஊவா | 60. 6 | 57. 1 | 36. 8 | 28. 5 | 11. 9 | 40. 4 |
| சப்பிரகமுவா | 50. 4 | 50. 9 | 44. 9 | 34. 7 | 12. 5 | 47. 2 |

# ஆஸ்பத்திரிக்கு மருந்து பெற அனுமதி தேவையில்லை

**கூட்டுப்படை அறிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை அனுப்புவதற்கு கூட்டுப்படை தலைமை அலுவலகத்தால் விதிக்கப்பட்டு வந்த தடை நீக்கப்பட்டுள்ளது இதேவேளை தனியார் மருந்தகங்கள் (பார்மஸி) தனிப்பட்ட வியாபார நிலையங்களுக்கு மருந்துகளை அனுப்புவதற்கு கூட்டுப்படைத்தலைமை அலுவலகத்தின் அனுமதியை தொடர்ந்தும் பெறவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் அனுமதியின்றி வடக்கிலும், கிழக்கிலுமுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பவேண்டிய மருந்து வகைகளின் தொகைபற்றி தீர்மானிக்கும்படி சுகாதார அமைச்சின் செயலாளரை கூட்டுப்படை தலைமை அலுவலகம் கேட்டுள்ளது. (சி)

# கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

கொழும்புக்கு வைத்திய சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும் அவர்களுடன் கூடச் செல்பவர்களும் தங்களுக்கு (2) நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் யாழ்/அரசினர் வைத்தியசாலையில் வரும் திங்கட்கிழமை காலை 8-00மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

# இளவாலையிலிருந்து ஏழுபேர் விடுவிப்பு

[வடமராட்சி]

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் அனுசரணையுடன் இளவாலைப் பகுதியிலிருந்து ஏழு பேர் நேற்று காலை 'குமண' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கூட்டி வரப்பட்டனர்.

ஒன்பது மாதமாகசிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்குண்டிருந்த மேற்குறித்த ஏழு பேரும் நேற்று முன்திமை் விடுவிக்கப்பட்டு நேற்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு காலை 10 மணியளவில் வந்தனர்.

இளவாலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அன்னம்மா (வயது 78), கஸ்பன் ஜோன் பொஸ்கோ (வயது 31), வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் வயது 65), ஹென்றி தேவசகாயம் (வயது 42), அவரது மனைவி லூட்ஸ் மேரி றெஜினா (வயது 40), செவஸ்தி சந்தியா (வயது 58) கந்தையா அழகரெத்தினம் (வயது 83] இவர் நடக்கமுடியாத நோயாளி) ஆகியோரே வந்து சேர்ந்தவர்களாவர்.

[யோ]

# இனப்பிரச்சினைக்கு 'விக்கினேஸ்வரன்' திட்டம்

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. விக்கினேஸ்வரனினால் தயாரிக்கப்பட்ட இனப் பிரச்சினை தீர்வு குறித்து புதிய திட்டம் ஜனாதிபதி விஜயதுங்காவிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த புதிய திட்டம் குறித்து மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா அறிந்திருந்தாராயினும் அவருக்கு டாக்டர் விக்கினேஸ்வரனை சந்திக்கும் வாய்ப்பு கிட்டவில்லை ஆயினும் அவர் இந்தியாவிற்கான சிறிலங்கா தூதுவர் நெவில் கனகரட்னாவை இது தொடர்பாக விக்கினேஸ்வரனை சந்தித்து விபரங்களை பெற்றுக்கொள்ளுமாறு பணித்திருந்தாராம்.

மாகாண எல்லைகளை மாற்றியமைத்தல், வட - கிழக்கு மாகாணசபைக்கு புத்துயிர் அளித்தல், மேலும் அதிகாரத்தை வழங்கல், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தல் என்பன விக்கினேஸ்வரனின் திட்டத்தில் உள்ள சில பகுதிகளாகும் எனத் தெரியவந்துள்ளது. இவரின் திட்டத்தின்படி கிழக்கில் சிங்களவர்கள் அதிகமாக இருக்கும் பிரதேசங்களை அருகிலுள்ள மாகாணங்களுடன் இணைக்கும் வழியாக எல்லைகளை மாற்றியமைத்தல் அத்துடன் முஸ்லிம்களுக்கென தனியான சபை அமைத்தல் என்பனவாகும்.


## இலவச பாமசி வகுப்பு

எமது சங்கத்தால் நடத்தப்படவிருக்கும் இலவச பாமசி பயிற்சி நெறிக்கு ஆர்வமுள்ளோர் இருபாலாரும் 23-05-1993 காலை 9 மணிக்கு நேரில் வரவும். கல்வித் தகைமை G. C. E. (O/L) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும். தொடர்பு:- வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் இல. 50/45, ஆஸ்பத்திரி வீதி, (கொட்டடி) யாழ்ப்பாணம்.

மு. பத்மநாதன்
செயலாளர்

(4929)


# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 20-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9490

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-4672, 24-4465, 27-9305, 28-9327, 27-5217
26-0535, 26-1427, 27-8149, 43-4170, 28-1553
24-0521, 42-2151, 40-1516, 26-6280, 24-9825

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-4162, 26-8878, 43-1857, 43-2666, 26-7217
26-5962, 40-4429, 41-9663, 26-1949, 40-0770
28-1111, 26-8497, 24-9645, 42-9325, 41-0526
26-6075

# வீரவணக்க கூட்டம்

5-ஆம் மாதங்களில் (மே மாதம்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்டத்தின் சண்டிலிப்பாய் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றுஇரவு 8.00மணிக்கு மானிப்பாய் ஆனந்தன் வைரவர் கோவில் முன்றலில் நடைபெறும்.

செல்வி சுகுணா, திரு.இளையவன், திரு.தங்கன் ஆகியோர் நினைவுரைகளை வழங்கவிருக்கும் இவ்வீரவணக்கக் கூட்ட முடிவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (90)

# ஹெலி நோட்டம்

நேற்றுக்காலை 10.20மணியிலிருந்து சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று யாழ். நகரையும, அதனை அண்டிய பகுதிகளையும் பரவலாகப் பல முறை வட்டமிட டுச்சென்றது. பின்னர்இது சுன்னாகம் பகுதியையும் வட்டமிட்டு நோட்டமிட்டது. அத்துடன் அவ்ரோ விமான நடமாட்டமும் அதிகரித்துக் காணப்பட்டது (90)

# மண்ணெய் விநியோகம்

குடாநாட்டு மக்களுக்கான அடுத்தகட்ட மண்ணெண்ணெய் விநியோகம் வழங்கப்படவுள்ளது. பங்கீட்டு அட்டைக்கு 1 லீற்றர் மண்ணெண்ணெயை இம்முறை வழங்க உள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வு புனர் நிர்மாணப் பகுதி அறிவித்துள்ளது.

விநியோகத்திற்கான மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளுமாறு சகல பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களையும் செயலக புனர்வாழ்வுப் பகுதி கேட்டுள்ளது. இவ் எண்ணெய் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்தே பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப் படுமெனத்தெரியவருகின்றது.

## அரசியல்

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு மிகவும் நெருங்கியவரான திரு. சொக்ஸிக்கு முக்கிய அமைச்சர் பதவி வழங்கியதன் மூலம் பிரேமதாசாவின் ஆதரவாளர்களை திருப்திப்படுத்தும் நோக்கமாகவே டி. பி. விஜயதுங்கா இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மேலும் துணைப்பிரதமர் போன்று சொக்ஸி தொழிற்படலாம் எனவும், உள்விவகாரங்களையும் இவரே கவனிப்பார் என்பதாலும் அவர் ஒரு சுப்பர் கபினற் அமைச்சராக இயங்கக்கூடும்எனவும்அரசியல் சட்ட நிபுணர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

## இது எங்கள்

சிறப்புத்தளபதி செல்விஜெனா அவர்களும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்கள்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவைஇரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் 'வீடியோ' ஒளிப்படநாடாவை வெளியிட யாழ். பல்கலைக் கழகப்பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதல் ஒளிநாடா பிரதியை பெற்றுக் கொள்வார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, திருமதி கோகிலா மகேந்திரன், திரு. சோ. பத்மநாதன் ஆகியோர் மதிப்புரை ஆற்றுவர்.

நெறியாளர் திரு. வை. இராமநாதன் பதிலுரையும், திரு. பொ. தாசன் நன்றியுரையும் நிகழ்த்துவர்.

விழாவின் இறுதியில் 'இது எங்கள்தேசம்' வீடியோ ஒளிப்படநாடா திரையிடப்படும்.


# விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும், பாரம்பரியவிளையாட்டும் விழாவும்

05-07-93 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நடாத்தும் அரங்கப் போட்டிகளும், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவிருக்கின்றன. தமிழீழ மட்டத்தில் நடைபெறவிருக்கும் இப் போட்டிகளில் கலந்துகொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளைக் கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், நாடகங்களுக்கான எழுத்துப் பிரதிகளும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களில் 05-06-93க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்படவேண்டும்.

## அரங்க வகைகளும், போட்டி விதிமுறைகளும்:-

1. பாரம்பரிய வழி அரங்கு:
   - அ) பாரம்பரிய வடிவங்களின் வழிவந்ததாக பாரம்பரிய வடிவங்களைப் பயன்படுத்தி புதிய உள்ளடக்கங்களைக் கூறுவதாக (உ-ம்: களத்தில் காத்தான்) அமைதல்வேண்டும்
   - ஆ) கலை வடிவத்தின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகளை உள்ளடக்கியதாகவும், எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
   - இ) நிகழ்ச்சி 90 நிமிடங்கள் கொண்டதாகஇருத்தல் வேண்டும்.
2. சமகால அரங்கு.
   - அ) இயல்பு நெறி அரங்கு (வழமையாக மேடையேற்றப்படும் நாடகங்களைப் போன்றது)
   - ஆ) மோடிமை அரங்கு குறியீட்டுப் பாங்கானவை (உ-ம்: உயிர்த்த மனிதர் கூத்து)
   - இ) இக்கலை வடிவத்தின் கருப்பொருள் கலை அம்சம் நிறைந்ததாகவும், சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளையொட்டியதாகவும், எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
   - ஈ) நிகழ்ச்சி 60 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

தயாரிப்பு மற்றும் போக்குவரத்துக்கான செலவீனங்களை உருவாக்க அமைப்புக்களே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

## பொது அறிவுறுத்தல்கள்:

1. நேரம் வரையறுக்கப்பட்ட அளவிலிருந்து 05 நிமிடங்கள் மட்டுமே முன்பின்னாக அமையலாம்.
2. ஒவ்வொரு உப பிரிவிலிருந்தும் பின்வரும் விடயங்கள் தனித்தனியாக பரிசுக்காகத் தெரிவு செய்யப்படும்.

| | |
|---|---|
| 1. சிறந்த அரங்கு | 6. ஒளி அமைப்பு |
| 2. நெறியாள்கை | 7. ஒலி அமைப்பு |
| 3. எழுத்துரு | 8. பாத்திரம் |
| 4. இசையமைப்பு | 9. ஒப்பனை |
| 5. காட்சியமைப்பு | 10. வேட உடுப்பு. |

## பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்:

எமது பாரம்பரியமான பின்வரும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

| | |
|---|---|
| 1. சீனடி சிலம்படி | 2. கரகம் |
| 3. கோலாட்டம் | 4. ஆட்டக்காவடி |
| 5. கிளித்தட்டு | 6. கும்மி |
| 7. போர்த் தேங்காய் அடித்தல் | |

ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமானம் மிக்க பரிசுகள் வழங்கப்படும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மேலதிக விபரங்களைப் பெறவேண்டுமாயின் அவ்வவ் மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கோண்டாவில்,
தமிழீழம்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்.

(சி-6658)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 21 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.